For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

அக்டோபர் 2024

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

விலை : ரூ 60 • இதழ் 53






## இல்லம் தோறும் நற்செய்தி இது அறுவடைக்காலம் !

https://christianhistoricalsociety.in/

## பதிப்பாசிரியரிடமிருந்து..















**கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களே,**

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

'பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்'. உபாகமம் 32; 7

இந்த அக்டோபர் மாதத்திலே உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். கடந்த இரண்டு மாதங்களாக பேராயர் அசரியா மற்றும் வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களின் கொண்டாட்டங்களை பகிர்ந்து கொண்டோம். பேராயர் அசரியா அவர்களின் கட்டுரை போட்டி இம்மாதம் 30 ம் தேதியுடன் முடிவடைகின்றது. வரும் நவம்பர் மாதத்தில் பரிசளிப்பு மற்றும் விழா கொண்ட்டாட திட்டமிட்டு வருகின்றோம். அதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். இம்மாதத்திலும் வரலாற்றுச் சங்க பணிகள், சுற்றுப் பயணங்கள், கள ஆய்வுகளை இம்மாத ஆய்விதழில் மிக சிறப்பாக வந்துள்ளது. இம்மாதத்தில் நம்முடைய ஆய்விதழுக்கு சிறப்பு சேர்க்கும் வண்ணம் இரண்டு தொடர்களை அறிமுகம் செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக நமது இதழில் எழுதி புகழ்பெற்ற ஏமி கார்மைக்கேல் நாவலை எழுதிய முனைவர் த ஜான்சி பால்ராஜ் அவர்கள் எழுதும் புதிய தொடர் மற்றும் நெல்லை திருச்சபையின் முழு வரலாற்றை ரெமினா சுஜித் எழுதி வருகின்றார்கள்.

இவ்விதழளை வாசிக்கும் நேயர்கள், மிஷனெரிகள் மற்றும் ஊழியர்களின் தியாகங்களை மற்றவர்களோடு கூட பகிர்ந்துக் கொண்டு, மிஷனெரிகள் ஏற்றிய அந்த தியாக தீபத்தை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கட்டாய பணியாகும். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக மற்றும் அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தாங்கவும் ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பராபரனின் பணியில்

*Manna Selvakmuar*

9176780001

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

Contact Us

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,

**9176780001** **www.christianhistoricalsociety.in**

# ஓடைக்கரை திருச்சபையின் வரலாறு



ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி




தென் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியில் இருந்து தென்மேற்கே சுமார் 26 கிலோ மீட்டர் தொலைவில் மணிமுத்தாறு பாசனக் கால்வாய், குளங்கள் மற்றும் கிணறுகள் அதன் காரணமாக உருவான பசுமை மிகு வயல்கள் என இயற்கை எழில் மிகுந்த ஓர் கிராமம் ஓடைக்கரை. சேரன்மகாதேவியில் இருந்து தெற்கே 10 கி.மீ. தொலைவில் களக்காடு செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள கோவிந்தப்பேரியில் இருந்து கிழக்கே மூன்று கி. மீ. தொலைவில் இக்கிராமம் உள்ளது.

## ஓடைக்கரை ஊரின் உருவாக்கம்

கோவிந்தப்பேரி, நெடுவிளை, கரிசல் மற்றும் ஓடைக்கரை சார்ந்த இடையன்குளம் வட்டாரத்தில் அக்காலத்து திருநெல்வேலி மாவட்ட சி.எம்.எஸ் மிஷனின் தலைமை மிஷனெரி கனம். ரேனியஸ் ஐயரவர்கள் மூலம் நற்செய்திப் பணி 1824 முதல் தொடங்கியது. அந்த காலகட்டமான 1824 க்கு முன்பாகவே பெருங்கிராமமாக ஓடைக்கரை கிராமம் உருவாகி இருந்தது. சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பாக இக்கிராமம் உருவாகி இருக்க வேண்டும்.

## ஓடைக்கரையும் குடும்பங்களும்

ஓடைக்கரையில் வசிக்கும் பொதுமக்கள் மத்தியில் உள்ள பாரம்பரிய செவி வழிச் செய்திகளின் அடிப்படையில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் கீழ்காடு என மக்களால் அழைக்கப்படும் தேரி வட்டாரத்தில் இருந்து (தற்போதைய திருச்செந்தூர், சாத்தான்குளம், திசையன்விளை தாலுகாக்கள்) இடையன்குளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் நாடார்கள் இடப்பெயர்ச்சி செய்து குடியேறி உள்ளனர்.

தற்போதைய ஓடைக்கரைக்கும் கோவிந்தப்பேரிக்கும் இடையில் உள்ள **'குடியிருப்பு'** என்ற பகுதியில் இந்த குழுக்களில் முதல் குடும்பக் குழுவினர் (ஒரு தகப்பனின் மகன்கள் கொண்ட குடும்பம்) முதல் குடியேற்றமாக குடியேறி உள்ளனர். குடியிருப்பில் குடியேறிய இந்த முதல் நாடார் குடும்ப குழுவினர் தற்போது ஓடைக்கரை சி.எஸ்.ஐ. கிறிஸ்து தேவாலயத் தெருவின் வடபகுதியில் பின்னர் குடியேறினர். இக்குடும்பத்தார் வடக்கு வளசல் எனப்படும் ஏழு வீட்டு குடும்பத்தார் ஆவார்கள். அவர்களைத் தொடர்ந்து பிற குழுக்களும் சி. எஸ். ஐ கிறிஸ்து தேவாலயத் தெருவின் தென்பகுதியில் குடியேறினர். இவ்வாறு முதல் குடியேற்றத்திற்குப் பின்னர் குடியேறிய குடும்பத்தினர் **பின்வருமாறு:** அம்பலம் குடும்பத்தினர், பெரும் பத்து குடும்பத்தினர், துவரைக்குளம் குடும்பத்தினர், பாலையா குடும்பத்தினர், பவுல் குடும்பத்தினர், முத்தையா குடும்பத்தினர் இவ்வாறு குடியேறிய இவர்கள் தங்களோடு வாழ்வியலில் இணைந்து செயல்படும் சேவைத் தொழிலாளர்களான மருத்துவர் எனும் சவரத் தொழிலாளர் குடும்பம் மற்றும் சில சலவைத் தொழிலாளர் குடும்பங்களும் குடியேற்றினர். ஓடைக்கரை கிறிஸ்தவ கிராமமான போது சலவை மற்றும் சவரத் தொழில் செய்த வண்ணார் மற்றும் மருத்துவர் சமூகத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றனர்.

வடக்கு வளசல் எனப்படும் ஏழு வீட்டு குடும்பத்தார் மற்றும் தேவாலயத் தெருவின் தென்பகுதியில் குடியேறிய பிற ஆறு நாடார் குழுக்களின் குடும்பத்தினர் என அனைவரும் தற்போதைய ஓடைக்கரையின் வட பகுதியில் சென்று கொண்டிருக்கும் பெரியதோர் ஓடையின் வடகரையில் தோப்பில் இருந்த சுடலைமாடசாமியைக் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். இவ்வாறு ஊர் உருவான காலகட்டத்தில் தான் நெல்லை

அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்கள் 1824 இல் நற்செய்தி அறிவிப்பதற்காக ஓடைக்கரைக்கு முதன் முதலில் வந்தார்.

1825 ஜனவரி மற்றும் பிப்ரவரியில் ஓடைக்கரை கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளத் தொடங்கினார்கள். இக்கிராமத்தார் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நிலையில் 1825 பிப்ரவரியில் இக்கிராமத்தை ரேனியஸ் ஐயரவர்கள் சந்தித்தது குறித்த குறிப்பு உள்ளது. படிப்படியாக இந்த கிராமம் முழுவதும் கிறிஸ்தவத்தை ஏற்று இக்கிராமம் கிறிஸ்தவ கிராமமாக மாறியது.

கீழ் காடு எனும் பகுதியிலிருந்து குழுவாக நான்கு பெரியவர்கள் தலைமையில் 1940 அளவில் இவ்வூரின் கீழ் பகுதியில் இருந்த கழுவன் திரடு எனும் மேடான பகுதியில் குடியேறினர். இவர்கள் அம்பலம், சாத்தான்குளம் மற்றும் கொங்கந்தான்பாறை பகுதியில் இருந்து வந்ததாக சொல்லப்படுகிறது. தற்போது கிழக்கு வளசல் என இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

## ஓடைக்கரை பெயர் காரணம்

புவியியல் - நிலவியல் அடிப்படையில் இக்கிராமத்தின் வடபுறம் செல்லும் பெரிய ஓடையின் தென்கரையில் அமைந்துள்ள கிராமம் என்ற அடிப்படையில் ஓடைக்கரை எனும் பெயரை இக்கிராமம் பெற்றுள்ளது.

## முன்னோர் வழிபாடு

தென் தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான சிறு தெய்வ வழிபாடான சுடலைமாடசாமி வழிபாட்டின் தெய்வமான சுடலை மாடசாமியை இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இக்கிராமத்தார் அனைவரும் வழிபட்டு வந்துள்ளனர். பல நூல்களிலும் வில்லிசை புலவர்களின் வில்லுப் பாட்டிலும் கரிசல்பட்டி கிராமம் குறிப்பிடப்படுகிறது. கரிசல்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கிராமமான ஓடைக்கரையில் கரிசல்பட்டி மற்றும் ஓடைக்கரை ஆகிய இரு கிராமங்களின் எல்லை ஓரத்தில் தற்போது ஓடைக்கரையில் உள்ள கோவிந்தப்பேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் உள்ள தோப்பில் ஓடிக் கொண்டிருந்த பெரியதோர் ஓடையின் தென் கரையில் சுடலைமாடசாமி கோயில் இருந்தது. அந்த தெய்வத்தையே ஓடைக்கரை மக்கள் வழிபட்டு வந்துள்ளனர்.

ஓடைக்கரை என்ற இக்கிராமத்தின் பெயரை ரேனியஸ் தமது மிஷன் பதிவுகளில் பலமுறை குறிப்பிட்டுள்ளார். ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின் சி.எம்.எஸ் தலைமை மிஷனெரி ஆகப் பொறுப்பேற்று பணி செய்த பெற்றிட் மற்றும் சார்ஜென்ட் ஆகிய மிஷனெரிகளும் டோனாவூர் தலைமை மிஷனெரி ஆக இருந்த டென்ற் அவர்களும் தமது ஊழிய மிஷன் ரிப்போர்ட்களில் ஓடைக்கரை கிராமத்தைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## ஓடைக்கரையில் ரேனியஸின் நற்செய்திப் பணி

ரேனியஸ் ஐயரவர்களும், தாவீது, மாசிலாமணி, ஆசீர்வாதம், ஆகிய உபதேசிமார்களும் பாளையங்கோட்டையில் ரேனியஸால் நடத்தப்பட்டு வந்த செமினரியில் படித்து வந்த மாணவர்களும் இணைந்து இடைவிடாது சுற்றியலைந்து செய்த நற்செய்திப் பணியால் 1824 இல் நெடுவிளை, கோவிந்தப்பேரி கிராமங்கள், 1825 இல் கரிசல், ஓடைக்கரை, செவல், துவரைக்குளம், துலுக்கப்பட்டி, செங்குளம் (மலைச்செங்குளம்) ஆகிய கிராமங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றன. இக்கிராமங்களில் சிறு சிறு கூட்டமாக மக்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள் என குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரேனியஸ் ஐயரவர்கள் சபை மக்களை சந்தித்தல்

1824 ஆம் ஆண்டு கடைசி மாதங்களில் தோன்றிய சபைகளில் ஒன்றான இடையங்குளம் வட்டாரத்தைச் சார்ந்த நெடுவிளை சபை மக்கள் சுவிசேஷ ஊழிய ஆர்வம் மிக்கவர்களாக இருந்ததாகவும், அவர்களது ஊழியத்தின் பயனாகவும் அவர்களுக்கு கரிசல் ஓடைக்கரை கிராமங்களில் இருந்த செல்வாக்கின் மூலமாகவும் கரிசல் ஊர் தலைவனும் அவரைச் சார்ந்த சில குடும்பங்களும் அவர்களுக்கு உறவினர்களான ஓடைக்கரை மற்றும் அதற்கு அருகில் உள்ள கிராமங்களில் வசித்து வந்த சில வீட்டார்களும் கிறிஸ்துநாதரை அண்டிக் கொண்டார்கள் என்ற குறிப்பையும், 1825 பிப்ரவரியில் ரேனியஸ் ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மேற்கண்ட ரேனியஸ் ஐயரவர்களின் குறிப்பின் மூலம் நெடுவிளை, கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி மற்றும் இடையன்குளம் கிராம மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினர்களாக இருந்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

## சுற்றுக் கிராமங்களில் நற்செய்திப்பணி

1825 பெப்ரவரியில் கரிசல், ஓடைக்கரை மற்றும் கோவிந்தப்பேரி ஆகிய சபைகளை சந்திப்பதற்காக ரேனியஸ் ஐயரவர்கள் வருகை தந்த போது கரிசல் சபை மக்களின் உறுதியான விசுவாச நம்பிக்கைகளை நேரில் பார்த்தவுடன் உடனடியாகத் தம்மோடு வந்திருந்த சத்தியநாதனை கரிசல் சபை உபதேசியாராக ரேனியஸ் நியமித்தார். இவர் ஒரு உத்தம ஊழியன் என்றும் சாதுரிய பிரசங்கியார் என்றும் அடிக்கடி கரிசல் மற்றும் சுற்றி இருந்த அனைத்து கிராமங்களுக்கும் சென்று நற்செய்தி அறிவித்து வருகிறார் என்றும் ரேனியஸ் லண்டன் சி. எம். எஸ். சங்கத்தாருக்கு அனுப்பிய மிஷன் ரிப்போர்ட்கள் மூலம் அறிந்து கொள்கிறோம். இவரே ஓடைக்கரை திருச்சபை மக்களையும் சந்தித்து நற்செய்தி அறிவித்து அங்கு ஆராதனை வழிபாடுகளை நடத்தி வந்தவர் என்பதை அறிய முடிகிறது. இவரது உண்மை ஊழியம் கரிசல் சுற்றுவட்டார கிராமங்களை விரைவில் கிறிஸ்துவண்டைக் கொண்டு வந்தது. கரிசல் கிராமத்திற்கு அவர் வருவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பாக 1824 முதல் 1825 வரை ஓராண்டு காலம் கோவிந்தப்பேரியில் சபை ஊழியராகப் பணியாற்றிய சத்தியநாதன் உபதேசியார் அநேகரை கிறிஸ்துவுக்கென்று ஆத்தும ஆதாயம் பண்ணி இருந்தார். அவரை கரிசல் கிராமத்திற்கென தனியாக 1825 பெப்ரவரியில் சபை ஊழியராக கரிசலில் தங்கி பணி செய்யும்படி ரேனியஸ் நியமித்தார். 1829 வரை அந்த பணி தொடர்ந்தது. இந்த நான்காண்டுகளில் ஓடைக்கரை திருச்சபையின் சபை ஊழியராகவும் சத்தியநாதனே பணி செய்திருக்க வேண்டும்.

## 1827 இல் ஓடைக்கரை திருச்சபை

1827 இல் டிசம்பர் மாதம் 16 மற்றும் 17 ஆகிய இரண்டு நாட்களில் ரேனியஸ் ஐயரவர்கள் தமது மிஷன் ஊழிய சுற்றுப் பயணத்தில் கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி ஆகிய கிராம சபைகளை சந்தித்திருப்பது குறித்து ரேனியஸ் ஐயரவர்களின் நாட்குறிப்புகளில் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அந்நேரம் கரிசலில் நான்கு பேர் ஞானஸ்நானத்துக்கு ஏற்ற கிறிஸ்தவ விசுவாசம் போதிய அறிவு உடையவர்களாக இருந்தபடியால் அவர்களுக்கு தாம் ஞானஸ்நானம் கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். கோவிந்தப்பேரி சபையில் கிறிஸ்தவ அறிவில் வளர்ச்சி அடைந்திருந்த ஒன்பது பெரியவர்களுக்கும் ஏழு குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததாக அதே குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## ஓடைக்கரையில் சி.எம்.எஸ் தொடக்கப்பள்ளி

சி.எம்.எஸ் மிஷன் சார்பாக 1829 இல் தொடங்கப்பட்ட பள்ளிகள் பட்டியலில் ஓடைக்கரை தொடக்கப்பள்ளி இடம் பெற்றுள்ளது. கரிசல், கோவிந்தப்பேரி ஆகிய இரண்டு இடங்களில் இருந்தும் பிள்ளைகள் பள்ளிக்கு வருவதற்கு ஏற்ற இடமாக இரண்டு ஊருக்கும் மத்தியில் ஓடைக்கரை இருந்தபடியால் 1829 இல் கோவிந்தப்பேரியில் நடைபெற்று வந்த தொடக்கப் பள்ளி ஓடைக்கரைக்கு மாற்றப்பட்டது. இராமன் என்ற யோவான் ஆசிரியர் ஓடைக்கரை பள்ளிக்கு ஆசிரியர் ஆகவும் ஓடைக்கரை சபை தேவாலயத்திற்கு சபை ஊழியராகவும் 1829 இல் ரேனியஸ் ஐயரவர்களால் நியமிக்கப்பட்டார்.

1829 ஆம் ஆண்டு ஜூலை 28 மற்றும் 29 நாட்களில் கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி சபைகளைச் சந்தித்த போது ரேனியஸ் ஐயரவர்கள் 29.07.1829 அன்று ஓடைக்கரை தொடக்கப்பள்ளிக்குச் சென்று பள்ளியை ஆய்வு செய்தார். பள்ளிக் குழந்தைகளின் கல்வி அறிவைச் சோதித்து அவர்கள் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்ததோடு அதைத் தமது மிஷன் ஊழிய நாட்குறிப்பில் குறித்துள்ளார்.

## இராமன் என்ற யோவான் உபதேசியார்

இராம பக்தரான இராமன் என்றொரு திருமணமாகாத வாலிபர் பாபநாசத்தில் இருந்து கோவிந்தப்பேரிக்கு 1824 இல் வந்து தங்கி தென்மேற்கு நெல்லை மற்றும் மேற்கு நெல்லை வட்டார நாடார் கிராமங்களில் வைணவ மதப் பிரச்சாரம் செய்து வந்தார். கோவிந்தப்பேரி, ஓடைக்கரை மற்றும் கரிசலில் சபை ஊழியம் செய்து வந்த சத்தியநாதன் உபதேசியாரின் பிரசங்கத்தைக் கேட்டு உள்ளத்தில் மாற்றமடைந்த இராமன் அடிக்கடி கரிசல் கிராமத்திற்கு சென்று அங்கு தங்கியிருந்த சத்தியநாதன் உபதேசியார் மூலம் கிறிஸ்தவத்தை ஏற்றார். ஞானஸ்நான ஆயத்தக்காரராக 1825 முதல் இராமன் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இராமனுக்கு 10.10.1826 இல் யோவான் என்ற பெயரில் பாளையங்கோட்டையில் வைத்து ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இராமன் என்ற யோவானுக்கு சிறந்த கல்வி அறிவு இருப்பதைக் கண்டுணர்ந்த சத்தியநாதன் உபதேசியார் அவரை அந்த ஆண்டில் 1825 இல் ரேனியஸ் மூலம் தம்மால் தொடங்கப்பட்ட கரிசல் சி.எம்.எஸ் மிஷன் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியராக நியமித்தார். கரிசலில் இராமன் நான்கு ஆண்டுகள் ஆசிரியராக பணி செய்தது குறிப்பிடத்தக்கது. 1829 இல் இராமன் என்ற யோவான் கரிசல் சபை ஊழியராக நியமிக்கப்பட்டார்.

கரிசலில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக இராமன் தமது பணியைத் தொடங்கினார். கரிசலில் தங்கியிருந்து கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி, பிற்காலத்தில் செவல், ஆகிய கிராமங்களில் இராமன் என்ற யோவான் சபை ஊழியர் பணியைத் திறம்படச் செய்து வந்தார். கரிசல் சபையில் ஞானஸ்நான ஆயத்தக் காரியாயிருந்த சந்தானம் அம்மாளை இவர் திருமணம் செய்திருந்தார். இத்தம்பதியருக்கு 1834 இல் பெண் குழந்தையும் பிறந்தது. 22.03.1835 இல் இராமர் என்ற யோவான் உபதேசியாரின் மனைவி சந்தானம் அம்மாள் மற்றும் உபதேசியாரின் ஆறு மாத பெண் குழந்தை ஆகியோருக்கு பரிபூரணம் மற்றும் பாக்கியம் என்ற பெயர்களில் கரிசல் தேவாலயத்தில் வைத்து கனம். ஜான் தேவசகாயம் ஐயரவர்களால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

## ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின் ஓடைக்கரை சபை

1835 இல் இரேனியஸ் ஐயரவர்கள் சி.எம்.எஸ் மிஷன் தலைமை கண்காணிப்பு மிஷனெரி பொறுப்பில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். முதலில் இதன் காரணமாக 1835 ஜூனில் திருநெல்வேலியை விட்டு அவர் வெளியேறி தூத்துக்குடிக்கு சென்று கடல் மார்க்கமாக அங்கிருந்து சென்னை சென்று பின்னர் ஆற்காட்டை தலைமையிடமாகக் கொண்டு ஜெர்மன் இவாஞ்சலிக்கல் மிஷன் எனும் மிஷனெரி சங்கத்தை நிறுவி சிறப்பாக ஊழியம் செய்து வந்த நிலையில் திருநெல்வேலி மாவட்ட உபதேசியார்கள் அவரை மீண்டும் திருநெல்வேலிக்கு வந்து மிஷன் ஊழியத்திற்கு தலைமை தாங்குமாறு கண்ணீர் கடிதங்களை அனுப்பியதால் அதை ஏற்று திருநெல்வேலி மாவட்டத்தில் சிந்துபூந்துறையில் மிஷன் வீடு கட்டி ஊழியத்தைத் தொடர்ந்தார். திருநெல்வேலி - கன்னியாகுமரி நெடுஞ்சாலைக்கு மேல்புறம் இருந்த பெரும்பாலான சபைகள் பெற்றிட் தலைமையிலான சி.எம்.எஸ் மிஷனில் இருந்து விலகி ரேனியஸ் பக்கம் சேர்ந்தன. அவை மேல் பக்கத்தார் எனப்பட்டது. சில சபைகள் பெற்றிட் பக்கம் நின்றன. சில சபைகள் இருபக்கமும் சேர்ந்தன, சில சபைகள் இருபக்கமும் சேராமல் நடுநிலை வகித்தன. 1838 இல் ரேனியஸ் ஐயரவர்கள் மரணம் அடைந்தார்கள். மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக நின்ற மேல் பக்கத்தார் சபைகள் படிப்படியாக பெற்றிட் தலைமையிலான சி.எம்.எஸ் மிஷனில் சேர்ந்தன. ஓடைக்கரை சபை எந்த நிலையை எடுத்தது என்பதை முழுமையாக அறிய இயலவில்லை.

## டென்ற் மேற்பார்வையில் ஓடைக்கரை சபை

1836 இல் டோனாவூர் மிஷனெரி கனம். டென்ற் மேற்பார்வையில் ஓடைக்கரை சபை இருந்தது குறித்து மிஷன் குறிப்புகள் மூலம் அறிகிறோம். நிர்விசாரங்கள், இந்து சடங்காச்சாரங்கள் கரிசல் மற்றும் சுற்றுக் கிராம சபைகளில் புகுந்தன. இதை அறிந்த கனம். டென்ற் தமக்கு கீழ் பணி செய்த பக்தியும் திறமையும் மிகுந்த சபை ஊழியர் ஒருவரை 1836

இல் கரிசலுக்கு நியமித்தார். புதிய சபை ஊழியர் தமது சிறந்த உபதேசத்தினாலும் முன்மாதிரியான வாழ்க்கையினாலும் கரிசல் வட்டார சபை மக்கள் மனம் மாறுவார்கள் என எதிர்பார்த்தார். ஆனால் எவ்வித மாற்றமும் இல்லை. கரிசல் சபையில் கட்சி பிரிவினைகள், சண்டைகள், இந்துக் கிரியைகள் மிகுந்து காணப்பட்டது. கரிசல் சபையின் இந்நிலையை அறிந்தவராக இரண்டு ஆண்டுகளுக்கு பின் 1838 இல் கரிசல் சபையை சந்தித்து மேற்பார்வை செய்ய டோனாவூர் மிஷனெரி டென்ற் வருகை தந்தார். சபையாரின் நிலை குறித்து வருத்தம் அடைந்த அவர் நிர்விசாரமான இந்த சபையில் இனியும் ஊழியம் செய்வது பயனற்றது. எனவே உங்களை வேறு ஊருக்கு பணி மாற்றம் செய்கிறேன் அங்கு சபை ஊழியம் செய்யுங்கள் இந்த ஊரில் இனி பணி செய்ய வேண்டாம் என தெரிவித்தார். ஆனால் சபை ஊழியர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை தொடர்ந்து இங்கு பணி செய்யலாம் என்ற தன் கருத்தை முன்வைத்தார். இதைக் கேட்டதும் கோபம் கொண்ட டென்ற் உடனடியாக தன் குதிரை மீது ஏறியவராக அந்த இடத்தை விட்டு வேகமாக வெளியேறிச் சென்றார்.

இதைக் கண்ட கரிசல் சபை ஊழியர் உடனடியாக கரிசலில் பனை ஓலையை மேற்கூறையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த ஜெபாலயத்துக்கு சென்று ஆண்டவரை நோக்கி கரிசல் சபையார் மனந்திரும்பும்படி கண்ணீரோடு ஜெபித்தார். கரிசல் சபையாருக்கு நெருங்கிய உறவினர்களாக இருந்த ஓடைக்கரை சபையாரிடத்திலும் இதே நிர்விசாரம் இருந்திருக்கலாம் இந்த அர்ப்பணிப்பு மிக்க சபை ஊழியரே ஓடைக்கரையில் இதே காலகட்டத்தில் சபைப்பணி செய்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

### 16 மாதங்களில் ஏற்பட்ட மாபெரும் எழுப்புதல்

கரிசல் மற்றும் சுற்றுக் கிராம சபை மக்களின் பின்மாற்றத்தை நேரில் கண்ட டோனாவூர் வட்டார தலைமை மிஷனெரி டென்ற் ஐயரவர்கள் கோபத்துடன் கரிசலை விட்டுப் புறப்பட்டுச் சென்றது முதல் அதிக ஜெபத்தோடு கரிசல் சபை ஊழியர் கரிசல் மற்றும் சுற்று கிராமத்தாரில் பின்மாற்றம் அடைந்தவர்களை மீண்டும் மனந்திரும்பச் செய்யும் சுவிசேஷப் பணியைச் சிறப்பாக செய்து வந்தார். கரிசல் உபதேசியாரின் கண்ணீர் ஜெபத்தோடு கூடிய நற்செய்தி பணியால் 16 மாதங்களில் கரிசல் மற்றும் சுற்றுக் கிராம சபைகளில் மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டது. 1840 க்குள் கரிசல் கிராமத்தார் அனைவரும் மீண்டும் கிறிஸ்தவர்கள் ஆகினர். இதேநிலையே ஓடைக்கரை கிராமத்திலும் நிலவியதால் அங்கும் ஒரு மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டது.

### 1849 இல் ஏற்பட்ட பெரும் உபத்திரவம்

1849 ஆம் ஆண்டின் சர்ச் மிஷன் ரிப்போர்ட்டில் (CMR) கரிசல் சபை சார்ந்த குறிப்புகள் காணப்படுகின்றன. அதில் 1849 இல் கரிசல் சபை பெரும் உபத்திரவத்தில் சிக்கி தவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட கரிசல் கிராமத்தாரின் வீடுகள் 1849 இல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இதே தீக்கிரையாக்கப்பட்ட சம்பவ விளைவு ஓடைக்கரையிலும் நடந்திருக்கலாம் அதனால் இரு கிராமத்திலும் பின்மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### 1871 இல் ஓடைக்கரை சபை

1871 இல் கரிசல் மற்றும் சுற்று வட்டார சபைகளுக்கான விசாரணை உபதேசியாராக திரு. R. வேதநாயகம் கரிசலில் தங்கி கரிசல் மற்றும் சுற்று கிராம சபைகளில் சபைப்பணி செய்துள்ளார். இவர் ஓடைக்கரை திருச்சபையையும் மேற்பார்வை செய்து வந்துள்ளார். ஓடைக்கரை தேவாலய கட்டுமானப் பணியில் கனம். கார் மிஷனெரி ஓடைக்கரை தேவாலயக் கட்டுமானப் பணியில் கூடுதல் அக்கறை காட்டியவர்களில் முக்கியமானவர் சி. எம். எஸ் தலைமை கண்காணிப்பு மிஷனெரியும் திருநெல்வேலி திருமண்டல சர்ச் கவுன்சில் தலைவர் பொறுப்பில் அக்காலத்தில் இருந்தவரும் (1897 முதல் 1915 வரை) தலைமை கண்காணிப்பு மிஷனெரி மற்றும் திருநெல்வேலி திருமண்டல சர்ச் கவுன்சில் தலைவர் (District Church Council Chairman) ஆகப் பணி செய்தவருமான கார் மிஷனெரி என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட கனம். E. S. கார் ஐயரவர்கள் ஆவார். அக்காலத்தில் தேவாலயங்களுக்கான புதிய இடங்களை வாங்குவது, தேவாலயங்கள் கட்டுவது, இடங்கள் வாங்கி பள்ளிக்கூடங்கள் கட்டுவது என பல பணிகளை அவர் செய்தார். ஓடைக்கரை தேவாலய கட்டுமானப் பணியில் கார் மிஷனெரி அவர்கள் முக்கியமான பங்காற்றினார்கள் என்பதை சர்ச் மிஷன் ரிப்போர்ட் குறிப்புகளில் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

### ஓடைக்கரை கிறிஸ்து தேவாலய கட்டுமானப்பணி தொடக்கம்

ஓடைக்கரை கிறிஸ்து தேவாலய கட்டுமானப்பணி 1910 இல் தொடங்கப்பட்டுள்ளது. கட்டுமான பணி தொடங்கப்பட்ட காலத்திலும் கட்டுமானப் பணி நடைபெற்ற காலத்திலும் சபை ஊழியராக திரு. N. S. தவமணி உபதேசியார் அவர்கள் இருந்துள்ளார்கள்.

### ஓடைக்கரை கிறிஸ்து தேவாலய பிரதிஷ்டை (1914)

ஓடைக்கரை தேவாலயம் ஓடைக்கரை சபை பெரியோர்கள் மற்றும் சபை ஊழியர் திரு. N. S. தவமணி உபதேசியார் அவர்கள் ஆகியோரின் ஒன்றுபட்ட முயற்சியினால் அக்காலத்தில் சி.எம்.எஸ் தலைமை கண்காணிப்பு மிஷனெரியாக மற்றும் திருநெல்வேலி திருமண்டல சர்ச் கவுன்சில் தலைவராக இருந்த மற்றும் ஓடைக்கரை திருச்சபையை நேசித்தவருமான கார் மிஷனெரி என்றழைக்கப்பட்ட கனம். E. S. கார் ஐயரவர்களின் மேற்பார்வையில் சிறப்பாகக் கட்டப்பட்டது. அக்காலத்தில் இருந்த இடையன்குளம் சர்க்கிளுக்குள் இருந்த தேவாலயங்களிலேயே நீளமான தேவாலயமாகக் கட்டப்பட்டது. அதன் நீளம் 65 அடியாக இருந்தது. தேவாலயக் கட்டுமானப் பொறுப்பாளராக திரு. சுவி. தாவீது அவர்கள் இருந்ததாக மலேசியாவில் குருவானவராகப் பணி செய்த ஓடைக்கரையைப் பூர்வீகமாகக் கொண்ட கனோன். டேவிட் சாமுவேல் ஐயரவர்கள் தமது வாழ்க்கை வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார்கள். புதிதாக கட்டப்பட்ட இந்த தேவாலயம் கிறிஸ்து தேவாலயம் என்ற பெயரில் கனம். E. S. கார் ஐயரவர்களால் 09.

10. 1914 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### சுத்தாங்க சுவிசேஷ சபை பிளவுக்கான தொடக்கம் (1917-1924)

சி.எம்.எஸ் மற்றும் எஸ்.பி.ஜி ஆகிய இரு மிஷன்களுக்கும் பொதுவான பேராயராக 1896 இல் மகாகனம். மார்லி அவர்களும் அவருக்குப் பின் மகாகனம். A. A. வில்லியம்ஸ் அவர்களும் அவருக்குப் பின் 08. 12. 1915 இல் மகாகனம் உவாலர் அவர்களும் பொறுப்பேற்றார்கள். இம்மூவரும் சடங்காச்சாரங்களில் பற்று கொண்டவர்கள் என கூறப்படுகிறது. ஆனால் நிர்வாக அதிகாரம் 1915 வரை சி.எம்.எஸ் தலைமை கண்காணிப்பு மிஷனெரியான கார் ஐயரவர்களிடமே இருந்ததால் அக்காலத்தில் பெரிய சிக்கல்கள் எதுவும் எழவில்லை. அக்காலத்தில் 1897 முதல் 1915 வரை சி.எம்.எஸ் தலைமை கண்காணிப்பு மிஷனெரியாக இருந்த கார் மிஷனெரி சி.எம்.எஸ் மிஷனின் அடிப்படைக் கொள்கையான சடங்காச்சாரங்கள் அற்ற சுத்த சுவிசேஷம் என்பதில் மிக உறுதியாக இருந்ததால் முதலில் பொறுப்பேற்ற இரு பேராயர்களால் சடங்காச்சாரங்களை சி.எம்.எஸ் சபைகளில் நடைமுறைப்படுத்த இயலவில்லை.

### கார் மிஷனெரி இங்கிலாந்து செல்லுதல்

முதலிரு பேராயருக்குப் பின்பு 28.11.1915 இல் பேராயராக வந்த மகாகனம். உவாலர் இரு மிஷன் சபைகளின் நிர்வாக அதிகாரமும் தம்மிடம் தரப்பட்டால் தான் தாம் பொறுப்பேற்க முடியும் என பதவி ஏற்கும் முன்பே கூறி நிர்வாக அதிகாரத்தைப் பெற்றவராகவே பேராயர் பொறுப்பை ஏற்றார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கார் மிஷனெரி அவர்கள் தலைமை கண்காணிப்பு மிஷனெரி பொறுப்பில் இருந்தும் மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவர் பொறுப்பில் இருந்தும் விலகி தமது சொந்த நாடான இங்கிலாந்துக்கு சென்று விட்டார்.

### அத்தியட்சாதீன ஆலோசனை அமைப்பும் அத்தியட்சாதீன நிர்வாக சபையும் (Executive Committee) அமைக்கப்படுதல்

1917 அக்டோபர் 11 மற்றும் 12 ஆகிய இரு நாட்களில் இரு மிஷன் சபைகளின் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அத்தியட்சாதீன ஆலோசனை அமைப்பு பேராயரால் நிறுவப்பட்டு அது கூட்டப்பட்டது. 93 குருவானவர்கள், 135 சபை (லே) அங்கத்தினர்கள் பங்கேற்றனர். அந்த அத்தியட்சாதீன ஆலோசனை அமைப்பிலிருந்து பேராயரைத் தலைவராகக் கொண்ட அத்தியட்சாதீன நிர்வாக சபை (Executive Committee) அவரால் அமைக்கப்பட்டது. மேற்கண்ட இரு நிர்வாக சபை குறித்து அப்போதைய சீனியர் சி.எம்.எஸ் குருவானவர் Rev. R. F. ஆர்டில் அவர்கள் தலைமையில் சி.எம்.எஸ் குருக்களும் சி.எம்.எஸ் சபையாரும் வலிமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

07. 04. 1918 இல் கூடிய டயோசிசன் நிர்வாக சபையில் இரு மிஷன் சபைகளுக்குமான சொத்துக்கள் Tirunelveli Diocesan Trust Association - TDTA என்ற பெயரில் கொண்டு வரப்பட்டது. அது 1919 முதல். நடைமுறைக்கு வந்தது 1919 இல் நூற்றாண்டு மண்டபத்தில் இரு மிஷன் சங்க போதகர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை உறுப்பினர்கள் அடங்கிய ஐக்கிய கூட்டத்தில் இரு மிஷன் சபைகளுக்கும் உண்டான அனைத்து தேவாலயங்களிலும் ஆல்டர் திருமேசையில் சிலுவை வைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டது. அந்த தீர்மானத்திற்கு சி.எம்.எஸ் மிஷன் போதகர் அருள்திரு. சாலமோன் பாக்கியநாதன் தலைமையில் சி.எம்.எஸ் போதகர்களும் சபை கமிட்டி உறுப்பினர்களும் வலிமையான எதிர்ப்பை தெரிவித்தார்கள்.

### 1924 ல் எஸ்.பி.ஜி மற்றும் சி.எம்.எஸ் மிஷன்களின் நிலை

இரு மிஷன்களையும் சார்ந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சத்து பன்னிரெண்டாயிரம் அதில் சி.எம்.எஸ் மிஷன் சபையார் 79,000 மற்றும் எஸ்.பி.ஜி மிஷன் சபையார் 33,000.

### எஸ்.பி.ஜி சடங்காச்சாரங்களை, சி.எம்.எஸ் சபைகளுக்குள் நடைமுறைப்படுத்த முயற்சித்தல்

எஸ்.பி.ஜி மற்றும் சி.எம்.எஸ். மிஷன் சபைகள் இணைப்பால் சுத்தாங்க சுவிசேஷம் எனும் சி.எம்.எஸ் மிஷனின் அடிப்படைக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விடும் என்ற கவலை கொண்ட சி.எம்.எஸ் சபை குருவானவர்கள், பெரியோர்கள் இந்த ஐக்கிய திட்டத்தை ஏற்கவில்லை. அந்த நேரத்தில் சி. எம். எஸ் மிஷன் கோட்பாடுகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என சி.எம்.எஸ் மிஷன் சபையாருக்கு வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டது. ஆனால் அவை உடனடியாகவே மீறப்பட்டது. அந்நேரமே கோவில்பட்டி சி.எம்.எஸ் தேவாலய ஆல்டர் திருமேஜையின் மீது சிலுவையும் விளக்குத் தண்டும் வைக்கப்பட்டது. மேற்கண்ட காரியங்கள் ஆழ்வாநேரி மற்றும் செவல் சர்க்கிளுக்குட்பட்ட சி.எம்.எஸ் சபைகளில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது.

எஸ்.பி.ஜி & சி.எம்.எஸ் மிஷன் சங்க சபைகளை இணைத்து ஒரே நிர்வாக அமைப்பு கொண்ட டயோசிசன் அமைப்பதற்காக பேராயர் மகாகனம். டப்ஸ் நடத்திய ஐக்கிய கூட்டங்கள் (1924) மகாகனம். நார்மன் ஹென்ரி டப்ஸ் அவர்கள் 25.07.1923 இல் தாம் பொறுப்பேற்ற உடன் எஸ்.பி.ஜி மற்றும் சி.எம்.எஸ் எனும் இரு மிஷனெரி சங்க சபைகளை ஒன்றாக இணைத்து ஒரே நிர்வாக அமைப்பு கொண்ட டயோசிசன் அமைப்பதற்கான ஐக்கிய கூட்டங்கள் நடத்த திட்டமிட்டார்கள். இரு முறை கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. மூன்றாம் முறை காய்ச்சலின் மத்தியிலும் ஐக்கிய கூட்டத்தை நடத்தினார்கள். 247 பேர் பங்கேற்றனர். ஐக்கிய தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஐவர் தமது எதிர்ப்பை வலிமையாக வெளிப்படுத்தினர். 242/247 ஆதரவு என்ற அடிப்படையில் ஐக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக 24.05.1924 இல் ஆறு பெரியோர்கள் மூலம் திருநெல்வேலி சி. எம். எஸ். சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை உருவானது. 1925 இல் இடையன்குளத்தைத் தலைமை இடமாகக் கொண்டு திருநெல்வேலி சி. எம். எஸ். சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை என்ற

பெயரில் சபை ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

### சங்கை சுவி. தாவீது ஐயாவின் தாக்கம்

சுவிசேஷகர் தாவீது உபதேசியார் அவர்கள் கரிசல் சபை பெரியவர்களைக் கலந்தாலோசித்து அக்காலத்தில் கரிசல் சபையில் இருந்த 61 குடும்பத்தினர்களையும் புதியதாக உருவாக்கப்பட்ட சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் இணையவும் அதில் நிலைக்கவும் செய்ய 03.08.1924 அன்று ஓர் உடன்படிக்கை பத்திரத்தில் கையெழுத்திட வைத்தார். இந்த உடன்படிக்கை பத்திரத்தில் 61 குடும்பத்தில் 5 குடும்பத்தினர் கையெழுத்திடாத போதும் கரிசல் சபையார் அனைவரும் ஒட்டுமொத்தமாக சுத்தாங்க சபையில் 10 ஆண்டுகள் நிலைக்கும் படி செய்தார். நேர்மை மிக்க உண்மை ஊழியராக இருந்த சுவி. தாவீது அய்யா கரிசல் சபை ஊழியராக மட்டும் அல்லாமல் விசாரணை உபதேசியார் ஆக சுற்றுக் கிராம சபைகளில் மேற்பார்வை செய்தவராக இருந்ததால் குறிப்பாக மிக அருகில் இருந்த கிராமங்களான ஓடைக்கரையில் கரிசல் போன்று உடன்படிக்கை பத்திர திட்டத்தை அவர் நடைமுறைப்படுத்தாத போதும் தாவீது அய்யாவுக்கு தனி செல்வாக்கு இருந்தபடியினால் கரிசலைப் போன்று ஓடைக்கரையிலும் சபையார் அனைவரும் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் சேர்ந்ததனர். ஓடைக்கரை கிராமத்தார் அனைவரும் தொடக்க கால முதல் வழிபட்டு வந்த ஓடைக்கரை டயோசிசன் சபை கிறிஸ்து தேவாலயத்திற்கு ஓடைக்கரை ஊர் முழுவதும் சுத்தாங்க சுவிசேஷ சபையோடு இணைந்து நின்றதால் 1924 இல் தங்களுக்கென உரிமை கோரினர். ஆனால் அந்த இடத்தின் அடிமனைப் பத்திரம் சி.எம்.எஸ் மிஷன் பெயரில் இருந்ததால் அதைப் பெற இயலவில்லை. ஆதலால் தேவாலயத்தின் தென்புறம் இருந்த மெயின் தெருவை ஒட்டி கட்டப்பட்டிருந்த சி.எம்.எஸ் தொடக்கப்பள்ளியை தங்கள் வசமாக்கிக் கொண்டனர். சுத்தாங்க சுவிசேஷ சபை ஆராதனையை அந்த இடத்தில் நடத்தினர்.

### ஓடைக்கரை டயோசிசன் சபை கிறிஸ்து தேவாலயம் புதுப்பிக்கப்படும் சூழ்நிலை

ஓடைக்கரை சபையார் முழுவதுமாக சுத்தாங்க சபையை சார்ந்து நின்றனர். 12.10.1935 இல் கரிசல் வட்டார சி.எம்.எஸ் மிஷன் சொத்துகளை முறைப்படி பெற்றுக்கொள்ள பாளையங்கோட்டையில் இருந்து டயோசிசன் பிரதிநிதி கரிசலுக்கு வந்த போது மிஷன் சொத்துக்களை ஒப்படைப்பதின் அடையாளமாக கரிசல் மற்றும் சுற்றுக் கிராம தேவாலயச் சாவிகள் ஒப்படைக்கப்பட்ட போது ஓடைக்கரை டயோசிசன் சபை கிறிஸ்து தேவாலய சாவியும் டயோசிசன் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததது. இந்நிலையில் சில குடும்பத்தினர் டயோசிசன் சபையில் சேர விரும்பியதால் சபை புதுப்பிக்கப்படும் சூழ்நிலை உருவானது.

### ஓடைக்கரை சி.எம்.எஸ். சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை

ஓடைக்கரை சி. எம். எஸ். மிஷன் தொடக்கப்பள்ளி அந்நேரம் ஓடைக்கரை ஊர் நிர்வாகத்திற்குள் வந்ததால் ஓடைக்கரை சி.எம்.எஸ் சுத்தாங்க சுவிசேஷ சபையாரின் தேவாலய ஆராதனை 1962 வரை அக்காலத்தில் அந்த தொடக்கப் பள்ளியில் வைத்தே நடைபெற்று வந்தது. 1962 இல் ஓடைக்கரை ஊரின் தென்புறம் தற்போது சுத்தாங்க சுவிசேஷ சபையின் புதிய தேவாலயம் உள்ள இடத்தில் 42 சென்ட் நிலம் அவர்களால் வாங்கப்பட்டது. அங்கு தேவாலயம் கட்டப்பட்டது. அந்த தேவாலயம் சில ஆண்டுகளுக்கு முன் முழுவதுமாக அகற்றப்பட்டு புதிய தேவாலயமும் புதிய கோபுரமும் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அங்கு காலை மாலை ஆராதனை நடைபெற்று வருகிறது.

### டயோசிசன் சபை கிறிஸ்து தேவாலயம் திறக்கப்படுதல்

1946 / 1947 இல் ஓடைக்கரை திருச்சபையைச் சார்ந்த திரு. சுவாமிதாஸ் நாடார் ஓடைக்கரை கிறிஸ்து தேவாலய சாவியை டயோசிசன் அலுவலகம் சென்று முறைப்படி பெற்று வந்தார். திரு. கொர்நேலியு தேவாலயத்தை திறந்தார். தேவாலயம் திறக்கப்பட்ட கால கட்டத்தில் இருந்த ஓடைகரை சபையார் தேவாலயம் திறக்கப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் 1952 இல் ஓடைக்கரைக்கு சபை ஊழியராக வந்த திரு. துரைராஜ் ஆசிரியர் அவர்கள் கொடுக்கிற ஓடைக்கரை சபை சார்ந்த வரலாற்று குறிப்பில் தாம் ஓடைக்கரை சபை ஊழியராகப் பணி செய்த மூன்று ஆண்டு கால கட்டத்தில் (1952-1955) ஐந்து குடும்பத்தினர் மட்டுமே ஓடைக்கரை திருச்சபையில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் பின்வருமாறு மு. சாலமோன், மு. ஏசுவடியான், மு. தாசன் (தேவதாசன்) மேற்கண்ட மூவரும் முத்தையா நாடார் அவர்களது பிள்ளைகள் சு. சாமுவேல், திரவியம், சு. சாமுவேல் மற்றும் திரவியம் ஆகிய இருவரும் சி. எஸ். ஐ தேவாலய தெருவின் வடபுறம் வசிக்கும் வடக்கு வளசல் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.

### ஓடைக்கரை தேவாலய கோபுரக் கட்டுமானப்பணி

ஓடைக்கரை தேவாலய கோபுரக் கட்டுமானப்பணி சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை பிளவுக்கு முன்பே (1924 க்கு முன்பே) தொடங்கியது. கிறிஸ்தவ கிராமமாக ஒன்றுபட்ட திருச்சபை ஒரே தேவாலயம் என்ற அடிப்படையில் ஓடைக்கரை தேவாலயத்தை சபை மக்களே கட்டுமானப் பணியாளர்களாக களமிறங்கி சிறப்பாகக் கட்டி முடித்த பின்னர் தேவாலய கோபுரக் கட்டுமானப் பணியைத் தொடங்கினர். கோபுரத்தின் முதல் தட்டு கட்டப்பட்ட நிலையில் 1924 இல் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை பிளவு ஏற்பட்டது. அந்நேரம் ஓடைக்கரை சபையார் அனைவரும் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையோடு இணைந்து நின்றனர். அதன் காரணமாக தேவாலயம் சீல் வைக்கப்பட்ட சூழ்நிலையில் தேவாலயக் கோபுரக் கட்டுமானப் பணி பல ஆண்டுகளாக தடைபட்டது.

### மீண்டும் தேவாலயக் கோபுர கட்டுமான பணி தொடங்கப்படுதல்

1952 முதல் 1955 வரை ஓடைக்கரையில் சபை ஊழியராகப் பணி செய்த திரு. துரைராஜ் ஆசிரியர் தமது பணிக்காலத்தில் தேவாலய கோபுரம் ஒரு தட்டுடன் நின்ற நிலையில் காணப்பட்டதை குறிப்பிட்டதோடு தேவாலய

கோபுரத்தில் வைப்பதற்கு என மலேசியாவில் இருந்து திரு. ஞானப்பிரகாசம் அவர்களால் அன்பளிப்பாக வாங்கி அனுப்பப்பட்ட பெரியதோர் நாக்கு மணி கோபுரப்பணி தடைபட்டு நின்றதால் தேவாலயத்திற்குள் பல ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தது. தேவாலய கோபுரக் கட்டுமானப் பணியை மீண்டும் தொடங்கி சிறப்பாக கட்டி முடிக்க ஓடைக்கரையைச் சொந்த ஊராகக் கொண்ட மலேசியாவில் குருவானவராகப் பணி செய்த அருள்திரு. கனோன். டேவிட் சாமுவேல் ஐயரவர்கள் உதவி செய்தார்கள்.

1962 க்குப் பின்னர் கோபுர கட்டுமான பணி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. தேவாலய கட்டுமானப் பணியின் போது சபைமக்கள் சுண்ணாம்பு சாந்தை தாங்களே குழைத்து கட்டுமான பணியாளர்களாக தாங்களே நின்று வேலை செய்வது என உற்சாகமாய் இறங்கி பணி செய்தார்களோ அதே போன்று கோபுர கட்டுமானப் பணியிலும் உற்சாகமாய் பணி செய்தார்கள். பெரியதோர் பண உதவியை கனோன். டேவிட் சாமுவேல் ஐயரவர்கள் கொடுக்க தேவாலய கோபுரம் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டு 1967 இல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவாலய கோபுரத்தில் பொருத்துவதற்கு என மலேசியாவில் இருந்து திரு. ஞானப்பிரகாசம் அவர்களால் அனுப்பப்பட்ட இனிமையான சத்தத்தை நெடுந்தொலைவு வரை கேட்கும் படி செய்யும் நாக்கு மணி ஓடைக்கரை தேவாலய கோபுரத்தின் நான்காம் தட்டில் நிலை நிறுத்தப்பட்டது.

## ஓடைக்கரை சபை கிறிஸ்து தேவாலய பொன்விழா (1914-1964)

ஓடைக்கரை சபை கிறிஸ்து தேவாலய பொன்விழா அப்போதைய கரிசல் சேகர குருவானவர் அருள்திரு. D. ஜான் டேவிட் ஐயரவர்கள் காலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1964 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8, 9, 10 வியாழன் வெள்ளி சனி ஆகிய நாட்களில் தேவாலய பொன் விழா சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றது. 08.10.1964 இல் ஆயத்த ஆராதனையும், 09. 10. 1964 இல் ஞானஸ்நான ஆராதனையும் நடைபெற்றது. 10. 10. 1964 இல் அன்றையதினம் காலை 9. 00 மணியளவில் பரி. நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அன்றைய தினம் மதியம் 1. 30 மணியளவில் நடைபெற்ற பொன் விழா பண்டிகை ஆராதனையில் மகாகனம். பேராயர் A. G. ஜெபராஜ் அவர்கள் அருட்செய்தியை வழங்கினார்கள்.

## ஓடைக்கரை சபையின் இடைக்கால வளர்ச்சி

அருள்திரு. தா. டேவிட் சாமுவேல் ஐயரவர்கள், சுவிசேஷமுத்து பேரனாக, சுவி. தாவீது அவர்களின் மகனாக 02. 03. 1904 இல் கனோன். டேவிட் சாமுவேல் ஐயரவர்கள் பிறந்தார்கள். 05. 03. 1928 முதல் 1970 வரை 42 ஆண்டுகள் மலேசியாவில் குருவானவராகப் பணி செய்தார்கள். சொந்த ஊரான ஓடைக்கரை மீது அதிக பற்றும் பாசமும் கொண்ட டேவிட் சாமுவேல் ஐயரவர்கள் அதிக புத்தகங்களை வாங்கி சிறந்ததோர் வாசக சாலையை ஓடைக்கரையில் ஏற்படுத்தினார்கள். தேவாலயத்தின் தென்புறம் தமக்கு சொந்தமான இடத்தில் பெரியதொரு வீட்டைக் கட்டி அதில் இலவச தையல் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்தி சபை பாகுபாடு இன்றி ஓடைக்கரை மக்கள் தையல் கற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஒரு தட்டுடன் என்ற தேவாலய கோபுரத்தை மேல்தட்டு வரை கொண்டு சென்று அதை பிரதிஷ்டை செய்வதற்கு பெரிதும் உதவினார்கள் அதேபோன்று தேவாலயத்திற்கு மின் இணைப்பு பெறுதல், மொசைக் தரைத்தளம் போடுதல், தேவாலய வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டுதல் சபை ஊழியருக்கான மிஷன் வீடு கட்டப்படுதல் என அனைத்து தேவாலயம் சார்ந்த பணிகளுக்கும் மலேசியாவில் வசித்து வந்தாலும் ஓடைக்கரைக்கு உதவி செய்து வந்தார்கள்.

திரு. தானியேல் ரைட்டர் அவர்கள் மலேசியாவில் குருவானவராக பணி செய்து வந்த கனோன். டேவிட் சாமுவேல் ஐயரவர்களிடம் ஓடைக்கரை தேவாலயம் சார்ந்த (கோபுரம், மொசைத் தரைத்தளம் உட்பட) பணிகள் மற்றும் ஓடைக்கரை தையல் பயிற்சி நிலையம் போன்ற காரியங்களுக்காக பொருளாதார உதவிகளை பெற்றுக் கொடுப்பதில் இவர் முக்கியமானவராக செயல்பட்டார். தமது சார்பிலும் தேவாலய பணிகளுக்கு பண உதவிகளை செய்து வந்தார். கரிசல் சேகரத்தில் ஓடைக்கரை சபைக்கான சேகர கமிட்டி உறுப்பினராகவும் இவர் செயல்பட்டார்.

திரு. சு. சாமுவேல் அவர்கள் திரு. சுவாமிதாஸ் மகனாக திரு. சு. சாமுவேல் அவர்கள் பிறந்தார்கள். ஓடைக்கரை கிறிஸ்து தேவாலய பணிகளுக்கு என தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தேவாலய ஆராதனையில் தவறாது பங்கெடுத்து, தேவாலயம் மற்றும் தேவாலயக் கோபுரம் கட்டப்பட்ட காலங்களில் அவை புதுப்பிக்கப்பட்ட காலங்களில் நேரடியாக பணிகளை மேற்பார்வை செய்தார்கள். நீண்ட பல ஆண்டுகளாக ஓடைக்கரை சேகர கமிட்டி உறுப்பினராகவும் அவர்கள் செயல்பட்டுள்ளார்கள். தம் தந்தையாரைப் போன்று அவருடைய இளைய மகன் திரு. சா. சாலமோன் டேவிட் அவர்களும் ஓடைக்கரை தேவாலய பணிகளுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள். தேவாலயம் மற்றும் தேவாலய கோபுரம் புதுப்பித்தல் பணிகளுக்காக ஓடைக்கரை தேவாலயப் பராமரிப்பு மற்றும் வளர்ச்சி குழுவின் தலைவராக திரு. சா. சாலமோன் டேவிட் அவர்கள் சிறப்பாகப் பணிகளைச் செய்தார்கள்.

## ஓடைக்கரை தேவாலயம் மற்றும் தேவாலய கோபுரம் புதுப்பித்தல் பணி

தேவாலயச் சுவர்களின் பூச்சுமானம் பெயர்ந்து பழுதுபட்ட நிலையில் இருந்ததால் 2007 ஆம் ஆண்டின் கடைசியில் ஓடைக்கரை தேவாலய பராமரிப்பு மற்றும் வளர்ச்சி குழு அமைக்கப்பட்டது. அதன் தலைவராக திரு. சா. சாலமோன் டேவிட் அவர்களும் உதவியாக திரு ஜேக்கப் அன்பின்ராஜ் அவர்களும் செயல்பட்டார்கள். தேவாலய புதுப்பித்தல் பணி 17.01.2008 முதல் தொடங்கப்பட்டது. தேவாலயத்தின் உள்ளும் புறமும் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. அவையெல்லாம் அகற்றப்பட்டன அகற்றப்பட்ட சுண்ணாம்புச் சாந்து சபை பெண்கள் மூலம் தேவாலய வளாகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது. சிமெண்ட்

மூலம் பூச்சுமானம் செய்யப்பட்டது. தேவாலய பழைய வயரிங் இணைப்புகள் அகற்றப்பட்டு புதிய வயரின் செய்யப்பட்டது. தேவாலய புதுப்பித்தல் பணியை திரு சு. சாமுவேல் அவர்களும் மற்றும் திரு. R. சாமுவேல் அவர்களும் மேற்பார்வை செய்தார்கள். முழுமையாக புதுப்பிக்கப்பட்ட தேவாலயம் 2008 அக்டோபர் ஒன்பதாம் நாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அடுத்த நாள் 10 ஆம் தேதி அசன பண்டிகை நடைபெற்றது. தேவாலய கோபுரம் புதுப்பிக்கும் பணி 17. 06. 2013 அன்று தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. கோபுரம் புதுப்பித்தல் பணிகளுக்கு பெருமளவு நிதி உதவி திருச்சபை மக்கள் செய்தார்கள். மிகச் சிறப்பான முறையில் கோபுரம் புதுப்பிக்கப்பட்டது.

## ஓடைக்கரையில் பணி செய்த சபை ஊழியர்கள்

திரு. தவமணி, திரு. சௌந்தர பாண்டியன், திரு. பச்சைமுத்து, திரு. ஜேம்ஸ், திரு. துரைராஜ், திரு. ஐசக், திரு. தேவதாசன், திரு. மோகன், திரு. துரைராஜ், திரு. சீலன், திரு. ஜார்ஜ் சுவாமிதாசன், திரு. தானியேல், திரு. ஜெபக்குமார், திரு. G. லாரன்ஸ், திரு. பேதுரு, திரு. ஜேக்கப் அன்பின் ராஜ் ஆகியோர் சபை ஊழியர்களாக ஓடைக்கரையில் சிறப்புறப் பணி செய்துள்ளனர். 2020 முதல் திரு. G. லாரன்ஸ் அவர்கள் பணி செய்கிறார்கள். 1979 முதல் கரிசல் சேகரத்தின் Bible Women ஆக ஓடைக்கரையைச் சார்ந்த பா. புளோரா அவர்கள் பணி செய்கிறார்கள்.

## ஆண்டறிக்கை வருமான சுருக்கக் கணக்குப் படி ஓடைக்கரை திருச்சபையின் வளர்ச்சி

திருநெல்வேலி டயோசிசன் 1930 ஆம் ஆண்டு வருமான சுருக்கக் கணக்கு ஆண்டறிக்கையில் இடையன்குளத்தை தலைமை இடமாகக் கொண்ட செவல் சர்க்கிளுக்கு உட்பட்ட சபைகள் பட்டியலில் கரிசல்பட்டி, புலவன் குடியிருப்பு, ஓடைக்கரை மேல உப்பூரணி சபைகள் இடம் பெறவில்லை. இக்கிராமங்களில் சபையார் அனைவரும் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் அக்காலத்தில் சேர்ந்திருந்தனர். திருநெல்வேலி திருமண்டல 1933 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் ஓடைக்கரை சபை இடம் பெறவில்லை.

1943 ஆம் ஆண்டு டயோசிசன் ஆண்டறிக்கைப்படி ஓடைக்கரை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 35 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 16 பேர்.

1947-48 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி ஓடைக்கரை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 45 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 17 பேர்.

1956-57 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி ஓடைக்கரை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 64 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 34 பேர்.

1956-57ஆம் ஆண்டு மற்றும் 1962 - 1963 ஆம் ஆண்டு என இந்த இரு காலகட்ட ஆறு ஆண்டுகளுக்கிடையில் சி. எம். எஸ். சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் இருந்து அநேக குடும்பத்தினர் திருநெல்வேலி டயோசிசன் சி. எஸ். ஐ. ஓடைக்கரை திருச்சபையில் சேர்ந்து இருப்பதை புள்ளி விவரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

1962 - 1963 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி ஓடைக்கரை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 100 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 47 பேர்.

1970 - 1971 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி ஓடைக்கரை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 148 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 45 பேர்.

1924 முதல் சுமார் 20 ஆண்டுகளாக ஓடைக்கரை கிறிஸ்து தேவாலயம் பூட்டப்பட்ட நிலையிலே இருந்தது. ஓடைக்கரை CSI டயோசிசன் கிறிஸ்து தேவாலயத்தில் சில (இரண்டு) குடும்பத்தார் மட்டுமே (கூட்டு குடும்பமாக வாழ்ந்த காலகட்டம்) இருந்து வந்தார்கள் என்ற குறிப்பை பார்க்க முடிகிறது.

1980 க்குப் பின்னர் இந்த நிலை மாறியது. இந்துக்களில் இருந்தும் சி.எம்.எஸ் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் இருந்தும் CSI டயோசிசன் திருச்சபையில் பல குடும்பத்தினர் சேர ஆரம்பித்தார்கள்.

1997 - 1998 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி ஓடைக்கரை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 248 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 189 பேர். 1997 க்கு அடுத்து ஓடைக்கரை சபை மக்கள் வேலை நிமித்தமாக இடப்பெயர்ச்சி செய்ததால் ஓடைக்கரை சபை மக்களின் எண்ணிக்கை குறைந்தது.

2002 - 2003 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி ஓடைக்கரை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 188 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 139 பேர்.

## தற்போதைய ஓடைக்கரை திருச்சபை

தற்போதைய ஓடைக்கரை திருச்சபையில் 70 குடும்பத்தினர் இருக்கின்றனர். ஓடைக்கரை சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 230 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் 150 பேர். 2020 முதல் திரு. G. லாரன்ஸ் அவர்கள் ஓடைக்கரை சபை ஊழியராகப் பணி செய்கிறார்கள். ஓடைக்கரை சபை சார்ந்துள்ள கரிசல் சேகர தலைவராக 2020 முதல் அருள்திரு. ஆரோன் துரைராஜ் ஐயரவர்கள் பணி செய்கிறார்கள்.

# பேராயர். ஜே. வெஸ்டர்ன்


By

*Bishop Frederick J Western*





சுஜித் S



Bishop Frederick J Western

பேராயர் ஃபிரடெரிக் ஜே வெஸ்டர்ன் 1880 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதி லண்டன் (London) நகரில் பிறந்தார். மார்ல்போரோ (Marlborough) மற்றும் கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகத்தின் டிரினிட்டி கல்லூரியில் (Trinity College) கல்வி பயின்றார். 1901 ஆம் ஆண்டு கணிதத்தில் இரண்டாம் வகுப்பு மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றார். பின்னர் கேம்பிரிட்ஜில் உள்ள வெஸ்ட்காட் ஹவுஸ் (Westcott House) என்ற குருவானவர் பயிற்சி பள்ளியில் ஓராண்டு பயின்றார். அதன் பிறகு செல்சியில் (Chelsea) உள்ள செயின்ட் மார்க்ஸ் கல்லூரியில் (St.Mark's College) ஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியர் பட்டமும் பெற்றார்.

1904 ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் மிஷனில் சாதாரண உறுப்பினராக சேர்ந்த வெஸ்டர்ன், உடனே இந்தியாவிற்கு வந்தார். டெல்லியில் (Delhi) உள்ள செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரியில் (St.Stephen's College) தத்துவப் பேராசிரியராக பணியாற்றினார். அப்போது திரு. சுசில் குமார் ருத்ரா (Mr. Sushil Kumar Rudra) அக்கல்லூரியின் முதல்வராக இருந்தார். இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு இந்தியர் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்டது இதுதான். ருத்ராவின் கீழ் ஒன்பது ஐரோப்பியர்கள் பணியாற்றினர். 1909 ஆம் ஆண்டு அருள்திரு டபிள்யூ. எஸ். கெல்லி (Rev. W. S. Kelly) அவர்களுக்குப் பின் வெஸ்டர்ன் தற்காலிகமாக செயின்ட் ஸ்டீபன்ஸ் உயர்நிலைப் பள்ளியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

சிறிது காலத்திற்குப் பிறகு, வெஸ்டர்ன் சிம்லாவுக்கு (Simla) வடக்கே உள்ள கோட்கர் (Kotgarh) என்னும் இடத்தில் தனியாக பணியாற்றிக் கொண்டிருந்த ஸ்டோக்ஸ் (Stokes) என்ற அமெரிக்க மிஷனரியுடன் இணைந்தார். இருவரும் சேர்ந்து கிறிஸ்துவைப் பின்பற்றும் சகோதரத்துவம் (Brotherhood of the Imitation of Christ) என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த சகோதரத்துவத்தின் விதிமுறைகள் மிகவும் கடினமானவை. உறுப்பினர்கள் மாதம் ஐந்து ரூபாய்க்குள் வாழ வேண்டும் என்பது அவற்றில் ஒன்று. பிரசங்கித்தலைவிட சேவை மூலமாக இந்திய மக்களுக்கு இயேசுவைக் காண்பிப்பதும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதும் இதன் நோக்கங்களாக இருந்தன. வெஸ்டர்ன் ஒரு இந்து சாதுவைப் போல வாழ்ந்தார். சில காலம் இந்து மாணவர் விடுதியில் அவர்களோடு தங்கியிருந்தார். இரண்டு ஆண்டுகள் இந்த சகோதரத்துவம் நிலைத்தது. ஆனால் ஸ்டோக்ஸ் திடீரென விலகியதால் அது கலைந்துவிட்டது. இது வெஸ்டர்னுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அவர் மீண்டும் கேம்பிரிட்ஜ் மிஷனுக்குத் திரும்பி, செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரியின் தற்காலிக முதல்வராக நியமிக்கப்பட்டார். மீண்டும் தத்துவம் பாடம் நடத்த ஆரம்பித்தார்.

1914 ஆம் ஆண்டு மிஷனின் நிதித்துறையின் பொறுப்பை ஏற்று, அல்நட் (Allnutt) அவர்களின் பணிச்சுமையைக் குறைத்தார். அதன் பிறகு குருவானவராக ஆவதற்கான பயிற்சியை மிகுந்த ஆர்வத்துடன் தொடங்கினார். 1916 இல் டீக்கனாகவும், 1917 இல் குருவானவராகவும் நியமிக்கப்பட்டார். 1917 இல் கேனன் அல்நட் இறந்ததும், வெஸ்டர்ன் மிஷனின் தலைவராக பொறுப்பேற்றார். அருள்திரு எச். சி. கார்லியன் (Rev. H. C. Carlyon) சகோதரத்துவத்தின் தலைவராக இருந்தார்.

வெஸ்டர்னின் நிர்வாகத் திறமையும், தெளிவான நோக்கமும் டெல்லி பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக அவரை மாற்றியது. 1919 இல் கார்லியன் இறந்ததும், வெஸ்டர்ன் ஐயரவர்கள் மிஷன் மற்றும் சகோதரத்துவம் இரண்டின் தலைவரானார்.

அவர் மிஷனின் தலைவராக இருந்த 12 ஆண்டுகளில், மிஷன் தொடர்ந்து வளர்ச்சியும் உறுதிப்பாடும் பெற்றது. 1918 இல் முதன்முறையாக இந்தியர்கள் மிஷன் கவுன்சிலின் பதவி வழி உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். 1920 இல் செயின்ட் ஸ்டீபன்ஸ் சொசைட்டி உறுப்பினர்களாகவும் சேர்க்கப்பட்டனர்.

சகோதரத்துவம், செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரி மற்றும் டெல்லி பல்கலைக்கழகத்திற்கு அவர் பெரும் பங்களிப்புகளை வழங்கினார். அவரது அறிவார்ந்த நேர்மை, கடமை உணர்வு, மக்களின் மொழியைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம், சட்டங்களை உருவாக்கும் திறமை, எளிமையான ஆழ்ந்த பக்தி ஆகியவற்றால் அவர் மிகவும் பெயர்பெற்றவரகவும் இருந்தார்.

1925 முதல் பாம்பே (Bombay) பேராயர் பால்மர் (Bishop Palmer) மற்றும் மெட்ராஸ் (Madras) பேராயர் வால்லர் (Bishop Waller) ஆகியோருக்கு இந்தியா, பர்மா மற்றும் இலங்கை திருச்சபையின் சட்டங்கள் மற்றும் விதிகளின் அரசியலமைப்பை உருவாக்குவதில் உதவினார். இதினிமித்தம் அவர் சிறந்த சட்ட வல்லுனராக செயலாற்றினார். பேராயர் வால்லர் வெஸ்டர்னின் இந்த திறமையைப் பாராட்டி, **'நாங்கள் எல்லோரும் ஏதோ ஒரு ஆழமான கருத்தை எழுதி முடித்த பிறகு, வெஸ்டர்ன் அதை எடுத்து அதன் தேவையற்ற பகுதிகளை நீக்கிவிடுவார், அப்போது அதன் பொருள் தெளிவாகத் தெரியும்'** என்று கூறியுள்ளார். இந்த அரசியலமைப்பு 1927 இல் உருவாக்கப்பட்டது.

1928 இல் பேராயர் டப்ஸ் (Bishop Tubbs) ரங்கூனுக்கு (Rangoon) மாற்றப்பட்டபோது, வெஸ்டர்ன் திருநெல்வேலி (Tinnevelly) பேராயராக நியமிக்கப்பட்டார்.

அவர் திருமண்டலத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, அது நிதி நெருக்கடி காலமாக இருந்தது. முந்தைய பேராயரின் காலத்தில் திருமண்டலமயமாக்கல் திட்டம் அமல்படுத்தப்பட்டபோது, திருமண்டலத்தின் ஒரு பகுதியான ஆழ்வார்-செவ்வல் (Alvaner-Sevel) பகுதியில் ஏற்பட்ட பிளவும் அந்த நிதி நெருக்கடிக்கு காரணமாக இருந்தது. திருமண்டலத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் சேர்ப்பதே பேராயரின் முதல் முயற்சியாக இருந்தது. அவர் அன்பு மற்றும் கருணை நிறைந்த செயல்களால் அவர்களை அணுகினார். சுத்தாங்க திருச்சபையினர் (Suthangamit-tes) என்று அவர்கள் தங்களை அழைத்துக் கொண்டனர். அவர்களின் திருமணங்களை நடத்துவதில் பேராயர் பெரிதும் உதவினார், அவர்களின் திருமணங்களுக்கு அரசு அங்கீகாரம் பெற உதவினார்.

பேராயர் 'அறுவடைக்கு தயாராக இருக்கும் நிலங்களை' கண்டார். எனவே திருச்சபையின் சுவிசேஷப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். திருமண்டலத்திற்கு அவர் எழுதிய மாத கடிதங்களில் ஒன்றில், சேகரங்கள் சுவிசேஷப் பணியில் உண்மையான ஆர்வம் காட்ட வேண்டும் என்று கூறினார். பெரியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அவருக்கு மகிழ்ச்சியளித்தது. திருநெல்வேலியில் உள்ள கிறிஸ்தவர் அல்லாத எந்தக் குடும்பமும் சுவிசேஷத்தைக் கேள்விப்படாமல் இருக்கக்கூடாது என்பது அவரது ஆழ்ந்த விருப்பமாக இருந்தது. கடந்த நூற்றாண்டின் அயராத மிஷனரியான பிரதர்டன் (Brotherton) கூறியதைப் போல, 'இந்த மாவட்டத்தில் (சாயர்புரம்-நாசரேத் மிஷனரி மாவட்டம்) சுவிசேஷத்தை தன் வாசலில் கேட்காத வீடு இல்லை' என்று கூற அவர் ஆசைப்பட்டார். வெஸ்டர்ன் வெறும் விருப்பத்துடன் நின்றுவிடவில்லை. சேகரங்கள் மற்றும் சபை மன்றங்களை நற்செய்தி பணிகளை செய்ய ஊக்குவித்தார்.

திருமண்டல சுவிசேஷக் குழு மறுசீரமைக்கப்பட்டது. குருவானவர் ஊழியத்திற்காக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் தங்கள் பயிற்சிக் காலத்தில் இந்தக் குழுவில் சேர்க்கப்பட்டனர். இக்குழு ஒரு கண்காணிப்பாளரின் மேற்பார்வையில் வைக்கப்பட்டது.

சுவிசேஷப் பணிக்கு இப்போது அதிக பணம் தேவைப்பட்டது. அதிகரித்த தேவைகளை சந்திக்க, அவர் அனைத்து சாத்தியமான வழிகளையும் பயன்படுத்தினார். பேராயரின் நேரடி ஆர்வத்தைப் பெற்ற அத்தகைய வழிகளில் ஒன்று சுய வெறுப்பு காணிக்கை. இது அவரது பேராயர் பதவிக் காலத்தில் இரண்டு மற்றும் மூன்று மடங்காக உயர்ந்தது.

அவர் வெறும் ஞானஸ்நானத்துடன் திருப்தி அடையவில்லை. புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் வளர்ந்து கிறிஸ்தவ குணாதிசயத்தில் முன்னேற வேண்டும் என்பதில் அவர் சிறப்பு கவனம் செலுத்தினார். புதிய சபைகளை அவர் அடிக்கடி சந்தித்தார், கர்த்தருக்குள் உற்சாகமாக இருக்க அவர்களை ஊக்குவித்தார், கிறிஸ்தவ அறிவில் வளர உதவினார்.

வடக்கு திருநெல்வேலியின் பாழான நிலத்தை சுவிசேஷமயமாக்க இரண்டு அறிஞர்களான மிஸ் ஜாய் சாலமன் (Miss Joy Solomon) மற்றும் மிஸ் எம். எம். ஃப்ராஸ்ட் (Miss M. M. Frost) ஆகியோரின் முயற்சிகள் 1925 இல் சாயமலை (Sayamalai) என்ற இடத்தில் விடிவெள்ளி ஆசிரமம் (Vidivelli Ashram) என்ற பெயரில் மலர்ந்தது. பேராயர் இந்தத் திட்டத்தில் மிகவும் ஆர்வமாக இருந்தார். அவரே இந்த இரண்டு பெண்மணிகளையும் சாயமலைக்கு அழைத்துச் சென்று ஆசீர்வதித்தார். இந்தப் பணி மிகவும் அற்புதமாக வளர்ந்துள்ளது. 25 ஆண்டுகள் என்ற குறுகிய காலத்தில், தன்னை முழுவதுமாக அர்ப்பணித்த ஊழியர்கள் மூலம் கர்த்தர் என்ன செய்ய முடியும் என்பதற்கு இந்த ஆசிரமம் சாட்சியாக விளங்குகிறது.

ஒரு திருமண்டலம் செய்ய வேண்டிய சுவிசேஷப் பணியின் மற்றொரு அம்சம் அயல்நாட்டு மிஷனரி பணி. திருநெல்வேலி ஏற்கனவே தெலுங்கு பகுதியில் பணியாற்ற இந்திய மிஷனரி சங்கத்தை நிறுவியிருந்தது. **'திருநெல்வேலியின் செல்லப்பிள்ளை'** என அழைக்கப்பட்ட இந்த சங்கம் 1920 களில் நிதி நெருக்கடியை சந்தித்தது. இந்த விஷயம் பேராயரின் கவனத்தை ஈர்த்தது. அவர் இதை தனது சொந்தப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டார். ஜெபம் மற்றும் விசுவாசம் உள்ள மனிதராக, அவர் இதை கர்த்தரிடம் ஜெபத்தில் எடுத்துச் சென்று, அதற்காக உழைக்கத் தொடங்கினார். விரைவில் இந்திய மிஷனரி சங்கம் தனது சிரமங்களிலிருந்து வெளிவருவதைக் கண்டார். இந்திய மிஷனரி சங்கம் திருநெல்வேலிக்கும் திருவாங்கூருக்கும் (Travancore) இடையேயுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் பளியர் (Palliars) என்ற மலைவாழ் பழங்குடியினரிடையே பணியாற்றி வந்தது. இப்பணியில் தனது தனிப்பட்ட ஆர்வத்தைக் காட்ட, அவர் மலையில் வாழும் இந்த மக்களைப் பார்க்க நேரில் சென்றார். கிறிஸ்தவ பளியர்களுக்கு திடப்படுத்துதல் வழங்குவது அவருக்கு மகிழ்ச்சியளித்தது. கர்த்தரின் மீதும் அவரது மீட்பின் மீதும் விசுவாசம் கொண்ட இந்த அப்பாவி ஆத்துமாக்களை பார்த்து மகிழ்ந்தார்.

பேராயர் வெஸ்டர்னின் குருவானவர்களுக்கான போதனை ஊழியத்திலும், திருச்சபையை வழிநடத்துவதிலும் ஊக்கமளிப்பதகவே இருந்தது. திருச்சபையின் ஊழியத்திற்காக விசுவாசமும் அர்ப்பணிப்பும் உள்ள திறமையான மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார். குருவானவர்களின் பணியிலும், அவர்களின் தனிப்பட்ட மற்றும் திருச்சபை வாழ்க்கையிலும் தனிப்பட்ட அக்கறை காட்டினார். தன் சுமையை விளக்க பேராயரிடம் சென்ற எந்த குருவானவரும் ஏமாற்றம் அடைந்த மனதுடன் அவரது அறையை விட்டு வெளியேறவில்லை. அவரது ஞானமான அறிவுரைகள், அன்பான வார்த்தைகள், ஊக்கமளிக்கும் சொற்கள் பல பாடுகளை அடைந்த தேவ மனிதர்களின் இதயங்களை மகிழ்வித்தன.

குருவானவர்களைப் போலவே திருச்சபை ஊழியர்களும் தேவனின் ஊழியர்கள் என்று பேராயர் கருதினார். கிராமங்களில் அவர்கள் செய்யும் பணிக்கு போதுமான பயிற்சி பெற வேண்டும் என்று உணர்ந்தார். இதை நிறைவேற்ற, வேதாகமக் கல்லூரியில் உபதேசியார்களுக்கான வகுப்புகளைத் தொடங்கினார். இந்த வகுப்பு ஒரு பாராட்டத்தக்க முயற்சியாக இருந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக, வெஸ்டர்னின் தரத்திலான ஒரு பேராயர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத காரணங்களுக்காக பின்னர் அது நிறுத்தப்பட்டது.

கிராமச் சபைகளில் ஏற்படும் சிக்கல்களுக்கு தனியார் பிரசங்கிகளே காரணம் என்று பேராயர் கண்டறிந்தார். தவறான போதனைகளும் அவர்களால் பரப்பப்பட்டன. திருச்சபையை இந்தத் தீமைகளிலிருந்து காப்பாற்ற, அத்தகைய பிரசங்கிகளுக்கு அனுமதி வழங்கும் முறையை பேராயர் அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் சரியான போதனைகள் மட்டுமே வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டது. இந்த நடைமுறை தவறான போதனைகளுக்கும் மதச்சார்பற்ற கோட்பாடுகளுக்கும் எதிராக கதவை மூடியது.

கிராமப்புற கிறிஸ்தவர்களின் நலனில் பேராயர் காட்டிய தீவிர ஆர்வம், அவர்களின் அன்றாட வாழ்க்கையை நெருக்கமாக ஆய்வு செய்ததிலிருந்து தெரிகிறது. அவர்களிடையே இன்னும் மூட நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் நிலவுவதை அவர் கண்டறிந்தார். இதை அகற்ற, குருவானவர்கள் இந்த உண்மையை நேரடியாக அறிந்திருக்க வேண்டும் என்று உணர்ந்து, அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இந்தத் தீமையை அகற்ற முடிந்தவரை அனைத்தையும் செய்யுமாறு குருவானவர்களுக்கு அறிவுறுத்தினார்.

அறியாமை மற்றொரு தீமையாக இருந்தது. இதை எதிர்கொள்ள, திருமண்டலத்தில் இரவுப் பள்ளிகளையும் பெரியவர்களுக்கான பள்ளிகளையும் ஊக்குவித்தார். அவற்றின் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

பேராயர் வெஸ்டர்ன் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்களில் ஒருவராக இருந்தார். தலைமைத்துவம் இந்திய மக்களின் கைகளுக்கு மாறும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை அவர் தெளிவாகக் கண்டார். எனவே, அதற்கேற்ப திருமண்டலத்தை வழிநடத்தினார். அவர் எடுத்த துணிச்சலான நடவடிக்களில் ஒன்று, திருமண்டல நிதியின் பொறுப்பை ஒரு இந்தியரிடம் ஒப்படைத்தது. தலைமைத்துவத்தை இந்தியமயமாக்க வேண்டியதன் அவசியம் பேராயராக நியமிக்கப்படுவதற்கு முன்பே அவர் மனதில் இருந்தது. இது இந்தியா, பர்மா மற்றும் இலங்கை திருச்சபைக்காக அவர் வரைந்த அரசியலமைப்பில் தெளிவாகத் தெரிகிறது. நடைமுறையில், பொறுப்புகள் படிப்படியாக இந்தியர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவர்களின் திறமைகளில் அதிக நம்பிக்கை வைத்து பேராயர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் திருச்சபையை நடத்துவது ஆகியவற்றில் அவர்களின் பங்களிப்பினை ஊக்குவித்தார் .

திருமறையூரில் (Tirumaraiyur) உள்ள வேதாகமக் கல்லூரியின் அழகிய தேவாலயமும் பரந்த வளாகமும் பேராயரின் தொலைநோக்குப் பார்வைக்கு சாட்சியாக உள்ளன. திருநெல்வேலிக்காக மட்டுமே ஒரே நேரத்தில் 36 மாணவர்களுக்குக் குறையாமல் வேதாகமக் கல்லூரியில் பயிற்சியளிப்பதை அவர் தனது தரிசனத்தில் கண்டார். அக்காலத்தில் அது நிறைவேறவில்லை என்றாலும், கிறிஸ்தவப் பணியின் மீதும் தேவனின் வழிகாட்டுதலின் மீதும் உள்ள விசுவாசம், தற்போது நியமிக்கப்படும் குருவானவர்களின் எண்ணிக்கையை விட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமான குருவானவர்கள் வரும் ஆண்டுகளில் திருச்சபைக்குத் தேவைப்படுவார்கள் என்று நம்ப வைத்தது.

பேராயர் வெஸ்டர்ன் ஒரு அறிஞர். அவரது அறிவாற்றலைப் பற்றி நிறைய சொல்ல முடியும். அதோடு,

அவர் ஒரு வரலாற்றாசிரியராகவும் இருந்தார். திருநெல்வேலி திருமண்டல வரலாறு என்ற புத்தகமும், 1778-1937 குருவானவர்கள் பதிவேடு (Register of Clergy 1778-1937) என்ற மற்றொரு புத்தகமும் இதற்குச் சான்றாகும். இந்த இரண்டு தொகுப்புகளுக்கும் அவர் செய்த உழைப்பு மிகப் பெரியது. இந்த இரண்டு தொகுதிகளும், திருமண்டலத்தின் வரலாற்றைப் பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்கு அடிப்படையாக இருக்கும். அவர் 1951 இல் 'டெல்லிக்கான கேம்பிரிட்ஜ் மிஷனின் ஆரம்ப கால வரலாறு' (Early History of the Cambridge Mission to Delhi) என்ற நூலையும் எழுதியுள்ளார்.

1934 ஆம் ஆண்டு பேராயர் மிஸ் கிரேஸ் நியூ (Miss Grace New) என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர் சிறந்த கிறிஸ்தவ பண்புகள் கொண்ட பெண்மணி. திருமண்டலத்தின் தாயார் ஒன்றியத்தின் (Mothers' Union) செயலாளராக இருந்தார். பேராயரின் மனைவியாக வாழ்ந்த குறுகிய காலத்தில், பேராயர் 'தந்தை' என்றால் அவர் உண்மையான 'தாயாக' இருந்தார். தனது பழைய பதவியில் இருந்தபோது போலவே புதிய பொறுப்பிலும் அனைவரின் இதயங்களையும் வென்றார். 1935 இல், திருமணம் செய்து ஓராண்டுக்குள் திடீரென இறந்துவிட்டார். இந்த துயரமான நிகழ்வு திருநெல்வேலி பேராயரின் பிற்கால வாழ்க்கையை மங்கச் செய்தது. இருப்பினும், பலர் நினைத்ததைப் போல அவர் உடைந்து போகவில்லை. அதே உற்சாகத்துடனும் விசுவாசத்துடனும் தொடர்ந்து பணியாற்றினார்.

1938 இல் பேராயர் வெஸ்டர்ன் ஓய்வு பெற்று தனது தாய்நாட்டிற்குத் திரும்பினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு லண்டனில் டெல்லிக்கான கேம்பிரிட்ஜ் மிஷனின் பொதுச் செயலாளரானார். S.P.G, இந்திய திருச்சபை உதவிச் சங்கம், காலனி மற்றும் கண்டங்கடந்த திருச்சபைச் சங்கம் ஆகியவற்றின் பல குழுக்களில் உறுப்பினராக இருந்தார். வாழ்நாள் முழுவதும் திருச்சபை ஒற்றுமைக்காக ஆர்வம் கொண்டவராக, தென்னிந்திய திருச்சபை ஒன்றியத்தின் (Church of South India) உறுதியான ஆதரவாளராக இருந்தார். C.S.I தொடர்பாக S.P.G கொண்டிருந்த கொள்கையை ஏற்க முடியாததால், அதன் குழுக்களில் இருந்து விலகினார்.

1951 நவம்பர் 24 அன்று இங்கிலாந்தில் இறந்தார். பேராயர் வெஸ்டர்ன் ஒரு சிறந்த நிர்வாகி, அறிஞர் மற்றும் தத்துவஞானி. இரட்சகர் மீது அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பு தனித்துவமானது. அவர் வெறும் மிஷனரியாக மட்டுமல்லாமல், தேவனுக்காக தரிசனம் கொண்டவராகவும் இருந்தார். தன்னுடன் பணிபுரிந்த, தான் ஊழியம் செய்த அனைவரிடமும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். பெரும் கருணை கொண்டவராக இருந்தார். இவை அனைத்தும் தேவனுக்கும், இந்தியத் திருச்சபைக்கும் அவர் ஆற்றிய தனித்துவமான சேவையில் முக்கியப் பங்கு வகித்தன.


கிறிஸ்தவ **வரலாற்றுச் சுவடுகள்**

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
| --- | --- |
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society

A/c Number : 1748 020000 4906

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com

# ஓடிப் போனவன்...



கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழில் இரண்டு ஆண்டுகளாக எழுதி புகழ்பெற்ற ஏமி கார்மைக்கேல் நாவலை எழுதிய நாவலாசிரியர் முனைவர் த ஜான்சி பால்ராஜ் அவர்கள் எழுதும் புதிய தொடர்....




முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி


'சுந்தர். . . என்னப்பா பலத்த யோசனையா இருக்கிற மாதிரி தெரியுதே. . . ! என்னாச்சு? இன்னைக்கு உன் முகம் ரொம்பவே வாடி போயிருக்கு. வீட்டை நினைச்சிட்டியா?' முத்தையா பிள்ளை பரிவோடு கேட்டபடி அவன் அருகில் வந்தார்.

தஞ்சைப் பட்டணத்தில் திசைக்கு ஒன்றாக நான்கு பெரிய பெரிய மளிகைக் கடைகளுக்கு உரிமையாளர் அவர். இந்தக்கடை தான் அவரது வீட்டண்டை உள்ளது. நாற்பது வருசத்துக்கு முன்னால் சிறிய பெட்டிக்கடையாக வைக்கப்பட்டது. இன்றைக்கு அதன் அதிர்ஷ்டமோ என்னவோ நான்கு கடைகளுக்குச் சொந்தகாரராய் ஆகிப் போனார் இந்த முத்தையா. ஆனால் ஆளும் அவரது குணமும் மட்டும் மாறவே இல்லை. அதே தாழ்மை, பணிவு, இரக்க குணம். . . எல்லாமே அப்படியே இருந்தது. அதுதான் அவரது உயர்வுக்கு காரணம் என்று அவரது நட்பு வட்ட பண்பாளர்கள் சொல்லாத நாட்களே இராது.

'அதெல்லாம் ஒன்னுமில்லைங்க ஐயா. நான் எப்போதும் போலதான் இருக்கேன்' என்றான் லேசான புன்னகையோடு சுந்தர்.

'சாப்பிட்டியாப்பா. . .?'என்றார்.

'இனிமேல் தான் ஐயா. இவ்வளவு நேரமும் கடையில் கூட்டம் அதிகமா இருந்ததால சாப்பிட போக முடியல' என்றான்.

'சரி சரி நான் தான் வந்துட்டேன்ல. . . நீ போய் சாப்பிட்டுட்டு, வரும்போது மேல் பக்க திண்ணையில வச்சிருக்க பானையிலருந்து ஒரு சொம்பு தண்ணியும், அதுக்கு நேர் மேல ஓட்டு இடுக்குல என் பொடித்தடையும் வெளியில தெரியும் எடுத்துட்டு வந்துரு' என்றார், இடுப்பில் இறுக்கம் தளர்ந்த ஆடையை சரிசெய்தபடி. சட்டையில்லாத உடலின் இடதுபக்க தோளில் சுத்தமான சிறிய துண்டு மட்டும் எப்போதும் தொங்கி கொண்டிருக்கும்.

'சரிங்க ஐயா. . .!' என்று கிளம்பியவன் . . . வெளியில் பாட்டு சத்தம் கேட்கவே நின்றான். சற்று முகம் மலர வெளியில் எட்டிப் பார்த்தான். 'அது ஒன்னுமில்ல சுந்தரு, இந்த வேதகாரங்க எங்கையாவது வந்து நின்னுகிட்டு இப்படி பாட்டுப்பாடி எதையாவது சொல்லிட்டுப் போவாங்க. . . நீ போ... போய் சாப்பிடு. மணி மூணாவ போவுது பாரு. '

'நான் கொஞ்ச நேரம் பாத்துட்டு போறேன்யா. . . 'என்று அவரது அனுமதிக்காக அவரை பார்த்தான். ' அவுங்க ரொம்ப நேரம் நிப்பாங்கையா. . . மொதல்ல போய் சாப்பிட்டிட்டு வா. . . பிறகு வந்து பாரு . . . போ. . போ. . பசியில உம்மொகம் வாடக்கூடாது' என்ற அவரது அன்பொழுகும் வார்த்தைகளைத் தவிர்க்க இயலாமல் நகர்ந்தான்.

'சரிங்க. . . ஐயா'என்றவன்.

தனது காதுகளைப் பாடல் கேட்ட பக்கம் கொடுத்துவிட்டு வேகவேகமாக நடந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்தான். கடையிலிருந்து பின்பக்கமாக முப்பதடி தொலைவில் அந்த மச்சுப்பாவிய வீடு இருந்தது. அதன் முன்பக்கம் முத்தையா சிறுவயதில வசித்த ஓட்டுப்பறை. அது முத்தையா தனது ஆரம்பக் கால நிலைமையை மறந்து விடக் கூடாதென்பதற்காகவும், அவரது தாயார் நினைவாகவும் இடிக்காமலேயே வைத்திருந்தார். அதில் ஒரு அறையில்தான் சுந்தருக்குப் படுத்துக்கொள்ள இடம் கொடுத்திருந்தார். முத்தையாவும் ஓய்வெடுக்க அந்த வீட்டைதான் அதிகம் பயன்படுத்துவார்.

மண் சட்டி ஒன்றில் அவனுக்கான மதிய சோறு இருந்தது. அவனுக்கு பசிக்கவில்லை. பாடல் தூரத்தில் கேட்டுக் கொண்டிருந்தது. ராகம் மட்டும் தான் காதுகளை எட்டியது. வார்த்தைகளை அறிய தொலைவு இடையூறாகியது. அவர் சொன்ன தண்ணீரையும் மூக்குப் பொடியையும் எடுத்துக் கொண்டு வேக வேகமாக நடந்தான். மூன்று நாட்களுக்கு முன்னால் இதே ஆட்கள் அதே இடத்தில் நின்று கொண்டு பாடியதையும் பேசியதையும் கவனித்தான். முதலில் வேடிக்கையாகப் பார்த்தவன். . . பிறகு அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவனை கடைக்குள் இருந்து வெளியில் வந்து பார்க்க வைத்தது.

கடைசியாக அவர்கள், ஏசு உன்னை நேசிக்கிறார். அவர் உனக்காக மரித்தார் என்று மீண்டும் மீண்டும் கூறினார்கள். அந்த இரு வாக்கியங்களில் முதலில் கூறியது அவனது மனதை நெருடியது. அன்பிற்காக ஏங்கி தவித்த அவன் அதே வார்த்தைகளை மறுபடியும் கேட்க விரும்பினான். கடைக்குள் செல்லாமல் கடையின் ஒரு சுவற்றில் சாய்ந்து நின்று அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றான். முதலில் ஆரம்பித்த பாடல் முடிந்து அடுத்த ஒரு பாட்டை அவர்கள் இனிமையாகப்

பாடிக்கொண்டிருந்தார்கள்.

அதில் நான்கு வாலிபர்களும் ஒரு சிறுவனும் இருந்தனர். அவர்கள் கையில் ஏதோ சில புத்தகங்களை வைத்திருந்தனர். எல்லோருமே வெள்ளை வேட்டி அணிந்து, கிட்டத்தட்ட ஒரே நிறத்தில் சட்டையும் அணிந்திருந்தனர். முடி கலையாமல் எண்ணைத் தேய்த்து தலையை சீவியிருந்தனர். பாட்டு முடிந்ததும் அதில் ஒருவன் கையிலிருந்த புத்தகத்தை விரித்து சில நிமிடங்கள் சத்தமாக எதையோ வாசித்தான். பிறகு பேசினான். தமிழில்தான் பேசினான். இந்த தமிழ் வேறு விதமாக இருந்தது. ஆனால் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. அவர்கள் பேசியதில் பாதிக்குமேல் அவனுக்குப் புரியவில்லை.

இருந்தாலும் அதைக் கேட்க வேண்டும் போல் ஏதோ ஒன்று அவனைத் தூண்டியது. அந்த வழியாக சென்றவர்கள் அவர்களைப் பார்த்துக்கொண்டே நடந்து சென்றனர். சிலர் கண்டு கொள்ளவே இல்லை. ஆனால் அந்த இளைஞர்கள் நால்வரும் மிகக் கவனமாக தங்களுக்கான பணியைச் செய்து கொண்டிருந்தனர். கடைசியாக வானத்திற்கு நேராக முகத்தைத் திருப்பி கண்களை மூடி கைகளை கூப்பி நின்று யாரிடமோ பேசினார்கள்.

பேசி முடித்தவுடன் ஏசு உன்னை நேசிக்கிறார் மெய்யாகவே நேசிக்கிறார் என்று மூன்றுமுறை சொல்லி விட்டு தங்கள் கையில் வைத்திருந்த பனை ஓலைத் துண்டுகளை அங்கு நடந்து சென்றவர்களிடம் நீட்டினார்கள். ஒருசிலர் வாங்கினார்கள். சிலர் பவ்யமாகத் தலையாட்டி மறுத்தார்கள். சிலர் ‘படிக்கத் தெரியாது‘ என்ற பாவனையோடு விலகினார்கள். வாங்கியவர்கள் அதை உற்றுப் பார்த்துக் கொண்டே சென்றனர். அதில் ஏதோ எழுதியிருப்பதாக தெரிந்தது. ஒருசிலர் மட்டும் நின்று அதை வாங்கி வாசித்தபடியே நகர்ந்தனர்.

'அதில் என்ன எழுதியிருக்கும். . .!? கேட்டால் நிச்சயம் கிடைக்கும். ஆனால் அவர்களிடம் எப்படி செல்வது. ? யாராவது பார்த்து விட்டால். . . !!? சேச்சே. . . அது சரிவராது. கடைக்கு நேரே தான் நிற்கிறார்கள்.

முதலாளி பார்த்துவிட்டால் என்ன நினைப்பார். . !'. என்ற எண்ணம் வர. . . அய்யோ. . . நேரமாச்சே. . . !' என்று படபடப்போடு கடைக்குள் ஓடினான். முத்தையா, தான் அமர்ந்திருந்த பலகையைச் சுவர் ஓரமாகப் போட்டு உறங்கி கொண்டிருந்தார். அவன் வந்த சத்தம் கேட்டு உடனே விழித்துக்கொண்டார்.

' வந்திட்டியா. . .? சரி இருந்து பார்த்துக்கப்பா. . . நான் கொஞ்சம் படுத்து கண்ணசந்துட்டு எழுந்திரிச்சு வாரேன். இருக்க முடியல எனக்கு' என்றவர் அவன் நீட்டிய மூக்குப் பொடியை மட்டும் வாங்கி கொண்டு வெளியேறினார். அவன் மீண்டும் வெளியில் எட்டிப் பார்த்தான். அவர்கள் சற்றுத் தள்ளி நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். வெளியே வந்து நின்று மறையும்வரை அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தான்.

'ஏய். . . சுந்தரு. . . என்ன அப்படி பார்க்குற? இந்தா. . இதில என்னருக்குன்னு படிச்சிகாட்டு பார்ப்போம்' என்று அந்த ஓலையை நீட்டிய நபர், கடைக்கு வெற்றிலை வாங்க வாடிக்கையாக வரும் மாலையன். 'என்னது இது.?' சுந்தர் வாங்கி கொண்டே கேட்டான் .

'அந்தாபோறாங்கல்லவேதக்காரங்க. . . அவுங்கஎன்னை பார்த்ததும் இதை கையில குடுத்தாங்க. நான் வேண்டான்னா எனக்குப் படிக்கத் தெரியாதுன்னு நெனைச்சிருவாங்க பாரு. . . அதான் வாங்கி கிட்டேன். ஈ. . ஈ. . . ஈ. . அது என் முகராசி அப்படி சுந்தரு. என்னை யாரு பார்தாலும் ‘நீவாத்தியாரா?‘ன்னு தான் கேப்பாங்க. நான் பள்ளிக்கூட பக்கமே போவலன்னு யாருக்கு தான் தெரியபோவுது. ? இந்தா, பிடிப்பா. . . இப்படி நெரையா ஓலைகளை வாங்கி என் வீட்டு கூரையில சொருவி வச்சிருக்கேன். தூர போடமாட்டேன். . . ஏன்னா எந்த தெய்வம்னாலும் அது தெய்வந்தானேப்பா. . !? நாம எந்த வம்பு தும்புக்கும் போவதில்ல. . . அந்த வேதக்கார கடவுள் கூட மட்டும் நமக்கு வாய்க்கா வரப்பு தகராரா என்ன? அதான் வாங்கிகிட்டேன். இன்னா நீ தான் நல்லா படிப்பியே. படிச்சி சொல்லு கேட்போம். அதுசரி இன்னைக்கு கடையில ஆளே இல்லையே. . . என்னவாம். ?' என்றபடி அந்தக் கடை திண்ணையில் அமர்ந்தார் மாலையன்.

'இன்னைக்கு வெள்ளி கெழமை இல்லியா. எல்லாரும் சந்தைக்கு போய்ருப்பாவண்ணே. இருங்க இருங்க அதை நான் படிக்கிறேன்' என்றவன் ஆசையாய் அதை வாங்கிப் பார்த்தான்.

ஒரு தாய் தன் பிள்ளையை மறப்பாளோ ?அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்று ஏசு சொல்கிறார் என்று அந்த ஓலையில் எழுதியிருந்ததை ஒவ்வொரு வார்த்தையாக கூட்டிக் கூட்டி வாசித்து முடித்தான் சுந்தர்.

'ஆஹா. . . என்னம்மா அழகா படிக்கிறாப்பா நீ! சுந்தரு நீ எல்லாம் கடைல வேலை செய்ய வேண்டியவனில்ல . . . பெரிய உத்தியோகத்துல இருக்கணும். நெசமாத்தான் சொல்றேன்' என்றவன் திரும்பி 'புளிச்' சென்று வெற்றிலையை துப்பிவிட்டு , 'பெரியவரு இன்னும் வரலையா?' என்றான்.

அவன் பதிலே சொல்லாமல் மீண்டும் அதையே வாசித்துக்கொண்டிருந்தான். அவன் முகம் எதையோ இழந்த சோகத்தில் இருந்தது. எல்லோராலும் மறக்கப்பட்ட ஒருவன். . . தன்னந்தனியாய் வேற்று மனிதர்கள் வாழும் ஏதோ ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்தவனிடம். . . தெய்வம் ஒன்று எதிரே வந்து நான் உன்னை மறக்கவில்லை என்று கூறியதை போல் இருந்தது அவனுக்கு. அவனால் இதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அடிக்கடி அதை எடுத்து வாசித்து வாசித்துப் பார்த்தான். இரவும் படுக்கையில் அதையே வாசித்துக் கொண்டிருந்தான். அவர்கள் இறுதியாக சொன்ன வார்த்தைகளும், அந்தப் பாடல்களும் அவனது நினைவுகளுக்குள் வந்தாடியது. மனதிற்குள் உறைந்து கிடந்த வெறுமை, வலி, வேதனைகள் எல்லாம் கண்ணீராய் வெளியேறி கொண்டிருந்தது.

'இனி இவர்களை நான் என்று பார்ப்பேன். . .? அந்த வார்த்தைகளையும் பாடல்களையும் மீண்டும் கேட்பேனா?' என்ற ஏக்கத்தில் அந்த ஓலையை தனது தலைக்கு அருகில் வைத்துவிட்டு உறங்கினான். . . . சுந்தர்.

**தொடரும். ..**


# 'புத்தகம் வெளியீட்டு விழா'




ஜே.பர்னபாஸ்
சேலம் வரலாற்றுச் சங்கம்


## சேலத்தில் லண்டன் மிஷன் திருப்பணிகளும், சி.எஸ்.ஐ லெக்லர் நினைவாலய வரலாறும்

அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் லண்டன் மிஷனெரி சங்கத்தின் திருப்பணிகள் சீர்திருத்த திருச்சபையின் காலங்கடந்த வருகையின் துவக்கத்தில் துவங்கினது. முன்னோடியாக ரோமன் கத்தோலிக்க திருத்தொண்டர்களின் திருப்பணிகள் சேலம் மாவட்டத்தில் ஆங்காங்கே கிறிஸ்தவத் திருச்சபைகளை உருவாக்கி பராமரித்து வரும் வேளையில் சீர்திருத்த திருச்சபையான லண்டன் மிஷன் இயக்கத்தின் திருப்பணிகளும் பணித்தளமும் 1827 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் தேதி சங்கை ஹென்றி கிறிஸ்பு மற்றும் அவரது மனைவி திருமதி. எலிசா ஸ்டெப்பி ஆகியோரின் சேலம் வருகையிலிருந்து துவக்கம் கண்டது. (On October 17th 1827, the Rev. Henry Crisp and his young wife arrived in Salem. They had travelled the whole way by Palanquin over bad roads, but on arrival received a most friendly welcome from the Collector Mr. Montague Dundas Cockburn) மோசமான சாலைகளில் ஆபத்தான அவர்களின் அந்த பயணத்தில், மழைகாலமானதால் காற்றும் மழையும் சுழன்றடிக்க அங்கங்கே தங்கித் தடுமாறி சேலம் வந்து சேர்ந்தது ஒரு பெரும் துணிச்சலான பயணமாக வரலாறு அதைச் சொல்லும். நிறைமாத கர்ப்பிணியான எலிசாவை தன்னுடன் பல்லக்கில் வைத்து சங்கை ஹென்றி கிறிஸ்பு ஐயர் அழைத்து வந்தார். இப்படித் துவக்கம் கண்ட லண்டன் மிஷன் பணிகள் பின்னர் 144 ஆண்டுகள் தொடர்ந்தது. அந்த மகத்தான பணிகளின் சுருக்கமான வரலாறும், அதன் தொடர்ச்சியான சேலம் கோட்டை சி எஸ் ஐ லெக்லர் நினைவாலய வரலாறும் 'A Brief History of London Mission in Salem & CSI Lechler Memorial Church' என்ற இந்த ஆங்கில புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் லண்டன் மிஷன் முன்னெடுத்த கல்விப்பணிகள் சங்கை ஹென்றி கிறிஸ்பு ஐயருக்கு சேலம் ஆரம்ப கல்வியின் தந்தை (Father of Primary Education in Salem) என்ற பெயரைப் பெற்றுத்தந்தது. திருமதி. எலிசா ஸ்டெப்பி அம்மையாரின் தலைமையில் 1829 ஆம் ஆண்டு துவக்கம் கண்ட சேலத்தின் முதல் பெண்கள் பள்ளி அம்மையாருக்கு சேலம் பெண்கல்வி முயற்சியின் முன்னோடி (Pioneer of Women's Education in Salem) என்ற பெயரைப் பெற்றுத்தந்தது. கோட்டைக்கும் செவ்வாய்ப்பேட்டைக்கும் இடையே 30 ஏக்கர் நிலம் அதிலே பள்ளிக்கூட கட்டுமானங்கள், 1828ல் சேலத்தின் முதல் சீர்திருத்தத் திருச்சபையின் துவக்கம், 1831ல் அதற்கான முதல் சிற்றாலயம்






கட்டப்பட்டது.

### இந்தியாவின் முதல் தொழிற் பயிற்சிப் பயிலகம் :

பின்நாட்களில் திருச்சபையின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு சங்கை லெக்லர் ஐயர் கட்டிய அன்றைய பெரிய கோயில் (இன்றைய சி எஸ் ஐ லெக்லர் நினைவாலயம்), இந்தியாவின் முதல் தொழிற்கல்வி பயிற்சிப் பயிலகம் இதனையே 'School of Industry' என வரலாற்று அறிஞர் திரு. லே பானு (Mr. H. Lee Fanu) தனது சேலம் மேனுவலில் குறிப்பிடுகிறார். (Industrial School first of its kind in the whole of india) என்று இங்கு நடந்த உன்னத வரலாறுகள் இந்த நூலில் சொல்லப்பட்டுள்ளது.

### இந்த புத்தகத்திற்கான தேவை:

சென்னையில் ஜெருசலேம் பல்கலைக்கழகத்தில் படித்துவந்த திருமதி. R. சரோஜினி சத்தியவதி, தனது முனைவர் பட்டத்திற்கான ஆய்வு படிப்பாக, சேலம் சி.எஸ்.ஐ லெக்லர் நினைவாலய வரலாற்றை தேர்வு செய்து, அற்குத் தேவையான வரலாறுகளைத் தேடி சேலம் வரலாற்றுச் சங்க அலுவலகத்தில் என்னைத் தேடி வந்த அவருக்கு, திரு. J. ஜான் தாமஸ் பிரதாப் அவர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழில் எழுதி வெளியிட்ட சி.எஸ்.ஐ லெக்லர் நினைவாலய வரலாற்று நூலைத் தந்தேன். அதனைப் பெற்றுக் கொண்ட அவர் இந்த நூல் தமிழில் இருக்கிறது, ஆனால் ஆங்கிலத்தில் இருந்தால் இது எனக்கு பயன்படும். இதனை தமிழில் யாராவது மொழிபெயர்த்துத் தந்தால், அது எனக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றார். அதற்கான தேடுதலைத் தொடங்கினேன். அந்த நூலாசிரியரின் அண்ணன் பேராசிரியர் J. ஜெயசீலன் அவர்களின் மகள் டாக்டர் திருமதி. அனிதா பிலிப் அவர்கள் மனமுவந்து இந்த நூலை மொழிபெயர்த்துத் தர முன்வந்தார்கள்; மொழிபெயர்ப்புப் பணி நடந்துவந்தது.

மற்றுமொரு நாளிலே இதுகுறித்து சேலம் வரலாற்றுச் சங்க அலுவலகத்தில் திருமதி. R. சரோஜினி சத்தியவதி அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, நான் சொன்னேன்: இப்படி மொழிபெயர்க்கப்பட்ட அந்த நூலை சேலம் வரலாற்றுச் சங்கம் சார்பில் ஒரு புத்தகமாக வெளியிட்டால், அது உங்களைப் போன்ற ஆய்வாளர்களுக்கும், ஆங்கில வாசகர்களுக்கும், அயல்நாட்டினருக்கும், பயன்படுமே என, அதனை ஏற்றுக் கொண்ட அவர்கள் வெளியிடப்படும் அந்த நூலுக்கான தனது முதல் நன்கொடையைத் தந்தார்கள்.

தனது பங்கிற்கான நன்கொடையையும் தந்து, மொழிபெயர்ப்பை சிறப்பான முறையில் செய்துத் தந்த டாக்டர் திருமதி. அனிதா பிலிப் அவர்களின் மொழிபெயர்ப்பை அதிகாரங்களாகப் பிரித்து; தலைப்புகளைக் கொடுத்து, கூடுதல் தகவல்கள், ஒளிப்படங்களை இணைத்து, நூலில் சொல்லப்படும் தகவல்கள்களை மூல நூல்களோடு ஒப்பிட்டு சரிபார்த்து, அச்சில் பதிப்பிப்பதற்காக திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தாரிடம் (Christian Historical Society) ஒப்படைத்தேன். சிறப்பான முறையிலே புத்தகத்தை வடிவமைத்து, பதிப்பித்துத் தந்தார்கள் அவர்களுக்கு என் நன்றி.

### புத்தகத்தின் முகப்பு அட்டைப் படம் :

இன்றைக்கு 110 ஆண்டுகளுக்கு முன்பு சேலத்தில் புகழ்பெற்று விளங்கிய சேலம் லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளி (Now CSI Boy's Higher Secondary School. Salem -1.) யில் படித்த சேல நாட்டு சிங்கலாந்தபுரம் ஜமீன் வாரிசான மாணவன் செல்வன் S. திருவேங்கடம் அப்பொழுது 1914 ஆம் ஆண்டு பள்ளியில் நடந்த ஓவியப் போட்டியில் பங்கேற்று, அந்த நாளில் இந்த ஆலயத்தை அப்படியே வரைந்து முதல் பரிசு பெற்றான். இதனை பத்திரமாக பாதுகாத்திருந்த அந்த மாணவன் இந்த ஓவியத்தை தனது குடும்ப பொக்கிஷமாக பாதுகாத்து வந்தார். அவரது மரணத்திற்குப் பிறகு இந்த ஓவியத்தை, அவரது வழித்தோன்றல்கள் பத்திரமாக பாதுகாத்து வந்தனர்.

சங்கை J. M. லெக்லர்ஐயரின்156ஆவதுநினைவுநாளை அனுசரிக்க, அவரது கல்லறையின் முன்பு கூடிய எங்களிடம் அந்த திரு. S. திருவேங்கடம் என்பாரின் பேரன் திரு. T. A. கலையரசன் (70) இந்த அவரது ஓவியத்தை எங்களிடம் பாதுகாத்திடச் சொல்லி ஒப்படைத்தார். நண்பர்களின் உதவிகளோடு அன்றே அந்தப் படம் Frame செய்யப்பட்டு சங்க அலுவலகத்தில் மாட்டப்பட்டது. இந்த படமே இப்பொழுது இந்த நமது புத்தகத்தின் முகப்பு அட்டைப் படமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் 110 ஆண்டுகளுக்கு முந்தைய படமான இதற்கு மேலே சங்கை லெக்லர் ஐயரின் படம் ஒரு நீள்வட்டத்திற்குள் அமைக்கப்பட்டு, படத்திற்கு மேல் அவரின் புகழ்ச்சியான 'The Apostle of Salem ' என்ற வாசகம் கீழே ' The Rev. J. M. Lechler, L. M. S. 'என்று அவர் பெயரும் வடிவமைக்கப்பட்டது. அவரது பிறப்பின் ஆண்டு இடதுபுறத்திலும், இறப்பின் ஆண்டு வலப்புறமும் அமைக்கப்பட்டது. இந்த எனது கருத்தாக்கத்தை அழகாக வடிவமைத்த கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் திரு. மன்னா செல்வக்குமாருக்கு நன்றி.

### அர்ப்பணிப்பு :

இந்த நூல் இதன் மூலநூலான 'சேலம் சி.எஸ்.ஐ லெக்லர் நினைவு ஆலயதிருச்சபையின் வரலாறு' என்ற தமிழ் நூலை எழுதி வெளியிட்ட திரு. J. ஜான் தாமஸ் பிரதாப் (1940-2021) அவர்களின் நீங்கா நினைவிற்கு அர்ப்பணம் செய்யப்படுகிறது. அவர் இந்த சேலம் லெக்லர் நினைவாலயத்தின் காலஞ்சென்ற மூத்த உறுப்பினர், திருச்சபை வரலாற்று அறிஞர், ஆலய பாடகர் குழுவிலும்(Chorister), கிறிஸ்மஸ் கீத பயணங்களிலும் (Christmas Carols) தனது பங்கையும், பணிகளையும், தொடர்ந்து அநேக ஆண்டுகளாக அளித்துவந்தவர்.

### இந்த புத்தக அச்சுப் பணிகளுக்கும், மற்றும் வெளியீட்டு விழாவிற்கும் உதவிய கரங்கள்:

சேலம் சி.எஸ்.ஐ லெக்லர் நினைவாலய போதகரும், ஈரோடு-சேலம்திருமண்டல உபதலைவருமான அருள்திரு. எழில் இராபர்ட் கெவின் அவர்கள் இந்த புத்தக வெளியீட்டு விழா லெக்லர் நினைவாலயத்தில் வைத்து நடத்துவதுதான் தகுதியானதும், ஏற்புடையதும் ஆகும் என்று சொன்னதோடல்லாமல் நூல்

அச்சாக்கத்திற்கும், வெளியீட்டு விழாவிற்கும், ஆலயம் சார்பாக பேருதவிகள் புரிந்தார். ஆலயத்தின் செயலாளர் திரு. R. இம்மானுவேல் சார்லஸ், பொருளாளர் திரு. Y. தேவகுமார், கமிட்டி அங்கத்தினர்கள், பேரவை உறுப்பினர்கள், திருச்சபை மக்கள் ஆகிய இவர்கள் அனைவருக்கும் சேலம் வரலாற்றுச் சங்கம் சார்பில் நன்றி. மேலும் ஈரோடு - சேலம் திருமண்டல பொருளாளர் திரு. A. நெல்சன் கொர்னேலியஸ் அவர்களுக்கும் எங்கள் நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

இந்த புத்தகத்தின் அச்சுப் பணிகளுக்கும், வெளியீட்டு விழாவிற்கும் நூலாசிரியர் திரு. J. ஜான் தாமஸ் பிரதாப் அவர்களின் பேரனும், ஜென்னிஸ் கல்வி அறக்கட்டளை நிர்வாகி திருமதி. கர்லின் எபி அவர்களின் மகனுமான ஜெர்மனியில் உள்ள திரு. ஜிஜு என்பவரும், திருச்சபையின் மூப்பரும், நமது வரலாற்றுச் சங்கத்தின் மேனாள் இணை செயலாளருமான காலஞ்சென்ற திரு. D. தம்பிபிரகாசம் அவர்களின் குடும்பத்தினர் குறிப்பாக திரு. T. எட்வின் பிரபாகரன், திரு. T. டேவிட் ஜெயராஜ், ஆகியோரின் உதவிகள் இந்தப்பணியில் ஈடுபட்டபோது ஊக்கமளித்தது. திரு. சுரேஷ் சாமுவேல், மற்றும் அவரது சகோதரி திருமதி. சசி ஜான், திருமதி. R. C. சுசீலா, திரு. கலைச் செல்வன், திரு. T. கிறிஸ்டோபர், திருமதி. ஸ்டெல்லா ஆகியோரும், சேலம் பெந்தேகோஸ்தே சபைகளின் மாமன்ற சேலம் திருமண்டல செயலாளரும், ஷாலோம் உயிர்மீட்சி சபையின் மூத்த போதகருமான அருள்திரு. டாக்டர் V. சாம்சன் ஜிம் ரீவ்ஸ், சேலம் வரலாற்றுச் சங்கப் புரவலர் திருமதி. C. மேரி சுலோச்சனா, சேலம் வரலாற்றுச் சங்க தகவல் தொழில்நுட்ப செயலர் திரு. J. விஜய் பாபு தனது தந்தை, தாயார் திரு. G. ஜெயசீலன் மற்றும் திருமதி. J. நளினி பரிமளா ஆகியோர் நினைவாக இந்த புத்தக அச்சுப்பணிகளுக்கு உதவினார்கள். சேலம் வரலாற்றுச் சங்கத் தலைவர் திரு. இம்மானுவேல் ஜெயசிங், சங்கப் பொருளாளர் திரு. A. ஞானதாஸ், சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திரு. J. அமுல்ராஜ், திரு. S. ஆல்பிரெட் குணசிங், சேலம் வரலாற்றுச் சங்க இணை செயலர் பேராசிரியர் டாக்டர் S. V. கோவிந்த ராஜு, சங்கத்தின் செயல்தலைவர் திரு. தாரை அ. குமரவேலு, சங்க உறுப்பினர்கள் பொறியாளர் சுப்ரமணியன், திரு. J. பாலகுமார், இவர்களோடு சேலம் வரலாற்றுச் சங்கப் புரவலர்கள் டாக்டர் C. T. கிருபா, டாக்டர் பிராங்க் கிருபா, மற்றும் டாக்டர் திலக் கிருபா, ஆகியோரின் உதவிகளையும் இந்த புத்தக உருவாக்கமும், வெளியீட்டு விழாவும் கண்டிருக்கிறது. சங்கத்தின் உபதலைவர் திரு. J. ஜான் ஜெயகர், திரு. I. பெஞ்சமின் பிராங்ளின், திரு. A. அயூப், திரு. R. சாமிநாதன், திரு. D. W. திவ்யநாதன், திருமதி. சாஷிதா மற்றும் திரு. சபீர் அகமத் ஆகியோரின் தன்னார்வத்துடனான உதவிகளையும் இங்கே நினைக்கிறேன். தற்போது சவுதி அரேபியாவில் பணிசெய்துவரும் நமது சங்கப்புரவலர் திரு. அகமத் அலி ரசூல்பாஷாவின் உதவியும் இந்த புத்தக வெளியீட்டுவிழா ஏற்பாடுகளுக்குக் கிடைத்தது. இவர்கள் அனைவருக்கும் மற்றும் இந்த பணிகளில் தோளோடு தோள் சேர்த்து நின்ற வரலாற்றுச் சங்க தோழர்களுக்கு நன்றி சொல்கிறேன்.

### புத்தக வெளியீட்டு விழா நிகழ்வு:

புத்தக வெளியீட்டு விழாவிற்கான வரவேற்பையும் நன்றி சொல்லுதலையும், புத்தகத்தினைப் பற்றிய அறிமுகத்தினையும் நான் அளித்தேன். புத்தகத்தினை கோவைத் திருமண்டல மேனாள் ஆயர் அருள்திரு. பிலிப் K. மல்லி ஜெபித்து பிதா, குமாரன், தூய ஆவி, ஆகியோரின் திருப்பெயரால் வெளியிட முதல் பிரதியை ஸ்தல திருச்சபையான சேலம் கோட்டை சி.எஸ்.ஐ லெக்லர் நினைவாலய ஆயர் மற்றும் தலைவர் அருள்திரு. D. எழில் இராபர்ட் கெவின் பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியை ஆலய செயலர் திரு. இம்மானுவேல் சார்லஸ் அவர்களும், மூன்றாவது பிரதியை ஆலய பொருளர் திரு. Y. தேவகுமார் அவர்களும் பெற்றுக் கொண்டனர். இறுதியாக நூலாசிரியரின் மூத்தமகன் திரு. T. கிறிஸ்டோபர் நான்காவது பிரதியைப்பெற்றுக் கொண்டார். ஆலய ஆயர் ஜெபிக்க, கோவைத் திருமண்டல மேனாள் ஆயரின் ஆசிர்வாதத்தோடு புத்தக வெளியீட்டு விழா இனிதே நிறைவுற்றது.

எந்த இடத்திலே இந்த உன்னத வரலாறு 197 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கம் கண்டதோ அதே இடத்தில், எந்த இடத்திலிருந்து கிறிஸ்துவின் சுவிசேஷம் சேலம் எங்கும் அறிவிக்கப்பட்டதோ அந்த இடத்திலிருந்தே அதன் வரலாறு இன்று மீண்டும் மறுவாசிப்பிற்கு மக்களுக்கும், ஊருக்கும், உலகிற்கும் அறிவிக்கப்படுகிறது. லண்டன் மிஷனெரி சங்கம் சேலத்தில் திருப்பணிகளை ஆரம்பித்த 200ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டம் வருகின்ற 2026-27 ஆண்டு காலகட்டத்தில் சேலம் மாவட்டத்தில், சேலம் மாநகரில் சிறப்பாகக் கொண்டாடப்படும் அந்த பொன்னான நன்நாளுக்கான முன்னோட்டம், ஒரு விடிவெள்ளி நட்சத்திர உதயம் இந்த 'A Brief History of London Mission in Salem & CSI Lechler Memorial Church' என்ற புத்தக வெளியீட்டு விழா என்றால் அது உண்மை. சேலம் லண்டன் மிஷன் இருநூறு ஆண்டுகளின் நிறைவு 1827-2027 அந்த நாளின் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களை முன்னெடுக்க (London Mission in Salem-Bicentennial Celebrations-2026-2027) நம்மை இந்த நூல் அழைத்துச் செல்வதாக.. . ஆமென்!





# CHS - LIBRARY RESEARCH AND DEVELOPMENT CENTRE

*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by June 2024.*

*In God's mission,*

*Manna Selvakumar*

*+91 9176780001*



# பாதிரி மாம்பழத்தின்

## அற்புத வரலாற்றைத் தேடி ஒரு பயணம்

ஜே.பர்னபாஸ்
சேலம் வரலாற்றுச் சங்கம்

***நீண்ட பயணங்களின் இடையே . . .***

கன்னியாகுமரி, நாகர்கோவில் போன்ற ஊர்களில் குடும்பம், நட்பு, மற்றும் வரலாற்றுத் தேடல் ஆகியவை சார்ந்த பயணங்களை முடித்துக் கொண்டு 8-7-2024 அன்று நடுஇரவில் மாயூரம் என அழைக்கப்படும் மாயவரம் (Mayavaram) அல்லது மயிலாடுதுறை வந்தடைந்தேன். 9-7-2024 அன்று காலை விடிந்ததும், புறப்பட்டு தரங்கம்பாடி வரலாற்று மரபுநடையில் குடும்பமாக நண்பர்களுடன் பங்கேற்றேன். அந்த மரபுநடை பயணத்தைக் குறித்து நமது 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்-ஆகஸ்டு -2024 இதழில் 'தரங்கம்பாடி வரலாற்று மரபு நடை' என்ற தலைப்பிலான எனது கட்டுரையில் வாசித்திருப்பீர்கள். அதைப் போன்றதே இந்த கட்டுரையும்; ஆனால், இது ஒரு வரலாற்றுத் தேடல் பயணம். தரங்கை மரபுநடை பயணத்தை முடித்துக் கொண்டு அன்று மாலை மாயவரம் வந்தடைந்தேன்.

***இரண்டாம் உலகப் போரின் டுனீசிய வெற்றியின் நினைவான கடிகார கோபுரம் [Victory Clock Tower]:***

அடுத்த நாள் 10-7-2024 காலை மாயூரம் நகரில் காலை நடை பயிற்சியின் போது, பட்டமங்கல தெரு என்ற இடத்தில் மூன்று சாலைகள் சந்திக்கும் இடத்தில் சாலை நடுவே, இரண்டாம் உலகப் போரில் பிரிட்டீஷ் இந்திய படைகள் வட ஆப்பிரிக்காவில் ஜெர்மானிய ஆப்பிரிக்க படைகளை (Afrika Korps) தோற்கடித்து துரத்தி வெற்றிகண்ட டுனீசிய வெற்றியின் நினைவாக, எழுப்பப்பட்ட வெற்றி கடிகார கோபுரத்தைக் (Victory Clock Tower) கண்டு வியந்தேன்.

இந்த இரண்டாம் உலகப்போரில் எனது அப்பம்மாவின் சகோதரர் ஹவில்தார் S. A. தங்கராஜ் , 8th Army என்ற படையில் பிரிட்டிஷ் தளபதி மாண்டகுமரி தலைமையில், போரில் பங்கேற்று திரும்பியவர். அவர் சொன்ன போர் கதைகள் எல்ஆலமீன், டப்ருக், மற்றும் டுனீசிய போர்க்களங்கள் எல்லாம் நினைவிற்கு வந்தததது. இந்த கடிகார கோபுரத்தை மாயூரம் நீடூர் ஹாஜி ஜனாப் S. E. அப்துல் காதர் சாஹிப் கட்டித்தந்தார் என்பதும், கோபுரத்தை சென்னை மாகாண ஆளுநர் ஆர்த்தர் ஹோப் திறந்து வைத்தார் என்பதும், இந்த கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டியவர் அன்றைய தஞ்சாவூர் கலெக்டர் திரு. J. W. பிட்சார்ட்ஸ் (இவர் ஒரு வேளை சேலம் பிட்சார்ட்ஸ் (Salem Bar Council-Barrister at Law - Mr. J. C. Pritchard -1849-1905) அவர்களின் மகனாகவோ, உறவினராகவோ இருக்கக்கூடும் என நினைக்கிறேன்.) என்பதும் இந்த கோபுரத்தில் பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் சொல்லும் செய்தி.

***மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை கல்லறை***

தமிழ் நாவலின் தந்தை, நீதிமன்றங்களின் தமிழ் வழக்காடு மொழியாக வரவேண்டும் என்று முதன்முதலில் குரல் கொடுத்த முதல் இந்திய நீதிபதி, நீதி நூல், சர்வசமய சமரச கீர்த்தனைகள், தந்த மாயூரம் முன்சீப் சாமுவேல் வேதநாயகம் பிள்ளை (1826-1889) யின் கல்லறைக்கும், அங்கே உள்ள அவரது சிலைக்கும், மலரஞ்சலி செலுத்தினேன். மாயவரத்தில்தான் தமிழின் அந்த முதல் நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' எழுதப்பட்டது. முன்சீப் வேதநாயகம் பிள்ளையின் ஊரிலே அவரது கல்லறையைப் பார்க்காமல், அவருக்கு அஞ்சலி செலுத்தாமல், போவேனோ! தமிழுக்கும், நீதித்துறைக்கும் தொண்டுசெய்த அவரை தமிழ் சமுகம் மறக்குமா?

மாயூரம் மாநகரில் அந்த ரோமன் கத்தோலிக்க கல்லறைத் தோட்டத்தில் வீடுகள் போல சில கல்லறைகள் பெரியதும் சிறியதுமாய் அங்கே கட்டப்பட்டு இருப்பது கண்டு வியந்தேன்.

***மாயவரம் TELC லுத்தரன் திருச்சபை வளாகம் :***

சங்கை பேரன்புரூக் (Rev. Baren bruck C.M.S started mission work at Mayavaram in the year 1823) ஐயருக்குப்

பின்பு மாயவரம் மிஷன் பணித்தளத்தை திருச்சபை மிஷனெரி சங்கம் (Church Missionary Society C.M.S) பல ஆண்டுகள் சிறப்பான முன்னேற்றம் இன்றி கடந்திட, இதனை கைவிட்டுவிட எண்ணியிருந்த நேரத்தில், தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் திரு. H. ஸ்டோக்ஸ் (Mr.H. Stocks) முயற்சியால் லீப்சிக் லுத்தரன் மிஷனுக்கு (Leipzig Lutheran Mission) அந்த மிஷன் வளாகம் அப்பொழுது வழங்கப்பட்டது. தற்பொழுது இந்த வளாகம் TELC லுத்தரன் திருச்சபைக்கு சொந்தமானதாக உள்ளது. 1845ஆம் ஆண்டு (02-01-1845) சங்கை கிறிஸ்டோபர் கார்ல் ஏர்னஸ்ட் ஆக்ஸ் ஐயர் (Rev. Carl Ernest Christoph Ochs -1812- 1873) மாயவரம் மிஷன் பணித்தள பொறுப்பை எடுத்துக் கொண்டார்.

இயற்கையை நேசிக்கும் சங்கை ஆக்ஸ் ஐயர் மாயவரம் மிஷன் வளாகத்தில் பலவிதமான மரங்களை நட்டார். அதில் ஒன்றுதான் 'பாதிரி மாமரம்' என்ற சிறந்த வகை. இந்த மாமரங்கள் நிறைந்த தோட்டம் 'பாதிரி தோட்டம்' (Padiri Garden) என அழைக்கப்பட்டது. இந்த மரங்களில் பழமையான மரங்கள் அதாவது ஆக்ஸ் ஐயர் வைத்து வளர்த்தவை. 130ஆண்டுகளுக்கு மேலான வயதுடையவைகள் காலப் போக்கில் ஒவ்வொன்றாய் விழுந்து போக, கடைசி மரமும் கடந்த 1977ஆம் ஆண்டு வீசிய கொடிய புயலால் விழுந்து போயிற்று என சொல்லப்பட்டது. இப்பொழுது காணப்படும் பெரிய மாமரங்கள் எல்லாம் ஐயர் வைத்த மரங்களின் வழித் தோன்றல்களே.

இந்த பாதிரி தோட்டத்தில் கார்க் மரங்கள் (Cork Trees) அல்லது மரமல்லி மரங்கள் இவை வாசம் மிகுந்த வெள்ளைப் பூக்கள் தரும். இந்த மரங்களின் பட்டைகளிலிருந்து மருந்து பாட்டில்களை அடைக்கப் பயன்படும் 'கார்க்' (Cork) தயாரிக்கப்படுகிறது. பூவரசு, அசோக மரங்கள், மூங்கில் மற்றும் தென்னை மரங்களும் அநேகம் உண்டு. ரோஜாத் தோட்டங்கள் மற்ற பூச்செடிகள் நிறைந்த பூந்தோட்டமும் இருந்தது.

**உணவு பள்ளிக்கூடம் [Food School] :**

1847 ஆம் ஆண்டு சங்கை ஆக்ஸ் ஐயர் செல்வி சாரா ஹேஹன்ட்ஸ் வால்டன் என்னும் யுவதியை திருமணம் செய்து கொண்டார். செல்வி சாரா சேலத்தில் பணிசெய்த லண்டன் மிஷனெரி சங்க மிஷனெரி சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயரின் (Rev. George Walton L.M.S Missionary at Salem) குமாரத்தி ஆவார். 1948 ல் மாயவரத்தில் ஐந்து பள்ளிகளை ஸ்தாபித்து இருந்தார். உணவு பள்ளிக்கூடம் (Food School) என அழைக்கப்பட்ட இந்த பள்ளிக்கூடம் அனாதைப் பெண்பிள்ளைகளுக்கானது. இந்த பள்ளி இன்றும் தொடர்கிறது (Now continues as Girls Hostel).

**TELC பரிசுத்த இம்மானுவேல் ஆலயம்:**

1856 ஆம் ஆண்டு ஜெர்மனி தேசத்திற்கு விடுமுறைக்காச் சென்று திரும்பிய சங்கை ஆக்ஸ் ஐயர் மாயவரம் மிஷன் வளாகத்தில் புதிய ஆலயம் கட்டுவதற்காக நிதி திரட்டிக்கொண்டு வந்தார். கூடவே டிரெஸ்டன் (Dresden) மாநகரில் வார்த்து உருவாக்கப்பட்ட திவ்ய மணியோசை கொண்ட மணியையும் கொண்டுவந்தார். ஆலயத்திற்கான அஸ்திபாரக்கல் 01-12-1857 அன்று போடப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டது. ஆலயமும் மணிகோபுரமும் கட்டப்படுவதற்கு முன்பே மணி ஒரு கட்டிடத்தின் மீது பொருத்தப்பட்டு ஒலிக்கப்பட்டது (15-03-1858); அதன் ஓசை திவ்யமாய் ஒலித்தது. இந்த மணிக்காக நன்கொடை ஈந்த அம்மையார் அமாலியா டோபர்டின் (Amalia Dobbertin) பெயரே இந்த மணிக்கும் வைக்கப்பட்டது. (பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த மணியை புதுப்பிக்கும் முயற்சியில், அதன் பழைய இனிய ஓசை மாறுபட்டுப் போனதுதான் மிச்சம்- பழமையான அரும்பொருட்களை அப்படியே போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பது இதன்மூலம் நாம் பெறும் பாடம்.) ஆனால் இந்த ஆலய கட்டுமானம் 7 ஆண்டுகளுக்கு பின்னர் சங்கை சுவார்ட்ஸ் ஐயரால் (Rev.Schwartz) ஐயரால் நிறைவாகி, திருநிலைப்படுத்தப்பட்டு திறக்கப்பட்டது (18-05-1864). இந்த ஆலயம் தற்பொழுது அமைப்பு மாறாமல் அப்படியே புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**ஒட்டு மாம்பழத்தில் ஒசத்தி – பாதிரி மாம்பழம் :**

பசுமையான பசுமஞ்சள் நிறத்தில், வாசனையுடனும் இனிக்கும் சுவையுடனும் இருக்கும், இந்த மாம்பழம் 'பாதிரி மாம்பழம்' என அழைக்கப்படுகிறது. மாயவரம் பகுதிகளில் அநேகமாக எல்லா பழக்கடைகளிலும் இந்த மாம்பழத்தை பழத்தை நான் பார்த்தேன். இந்த வகை மாம்பழங்கள் இங்கு மட்டுமல்ல, தமிழகத்திலும் மற்ற மாநிலங்களுக்கும் கொண்டுச் செல்லப்படுகின்றன. அந்த காலத்தில் இந்த மாம்பழங்கள் கப்பல் மூலமாக பர்மா, மலேயா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதியானது. பாதிரியார் வளர்த்த பழைய மரத்திலிருந்து அநேக ஒட்டுக் கன்றுகள் எடுத்து, பல்வேறு பகுதிகளுக்கும் அன்று இவை அனுப்பப்பட்டது. பாதிரியாரின் இனிய சுவிசேஷ பிரசங்கத்தைப் போலவே இந்த மாம்பழமும் இனித்ததால், இதனை 'பாதிரி மாம்பழம்' என அந்த பகுதி மக்கள் அழைத்தார்கள். நான் மாயவரம் டவுன் பகுதியில், அங்கிருந்த பழக்கடையில் இந்த மாம்பழங்களை வாங்கி, என் பைகளில் நிரப்பிக் கொண்டேன். பலநாட்கள் இந்த பழங்கள் எங்களுக்கு கூடுதல் உணவாக எங்கள் பயணங்களில் பயன்பட்டது.

**ஞானாச்சரியம் கொண்டுவந்த ஆச்சரியமான மாங்கன்று :**

தஞ்சை சரபோஜி மகாராஜாவின் நூல்நிலையமாகிய சரஸ்வதி மஹாலின் நூலகராக இருந்த ஒருவர்; அவர் சைவ சமயத்தில் வைராக்கியம் கொண்டவர். அவர் அந்த நூலகத்தில் சத்திய வேதத்தின் அபூர்வ பிரதி ஒன்றைக் கண்டெடுத்து, அதை தஞ்சை சுவிசேட கவிராயர் சங்கை வேதநாயகம் சாஸ்திரியாரிடம் காட்டி, அதன் உட்கருத்துக்களை சாஸ்திரியார் மூலமாய் அறிந்து கொண்டு, கிறிஸ்துவின் தொண்டனாகி 'ஞானாச்சரியம்' என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றார். இக்காரணத்தால் அவர் அரண்மனை உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டார். இதனால் சற்றும் மனந்தளராத திரு. ஞானாச்சரியம் மாயவரம் வந்து சங்கை. ஆக்ஸ் ஐயரிடம் பணியில் சேர்ந்துகொண்டார். ஆக்ஸ் ஐயரின் தேவ ஊழியத்தில் மாத்திரமல்லாது, அவரது மாயவரம் மிஷன் 'பாதிரி தோட்டத்திலும்' ஞானாச்சரியம் சிறப்பாக கண்காணிப்பு பணி செய்துவந்தார். சங்கை ஆக்ஸ் ஐயருக்கு அவரது பணிகளிலெல்லாம் வலதுகரம் போல் இருந்தார் இந்த ஞானாச்சரியம்.

ஒருநாள் எங்கிருந்தோ ஒரு அரிய மாங்கன்றை திரு. ஞானாச்சரியம் கொண்டுவந்து, அதை ஆக்ஸ் ஐயரின் 'பாதிரி தோட்டத்தில்' நட்டுவைத்தார். இந்த மரம் வளர்ந்து கனிகொடுக்கத் துவங்கிய போதுதான் தெரிந்தது, ஞானாச்சரியம் கொண்டுவந்து இங்கே நட்டுவைத்தது, ஒரு ஆபூர்வ வகை மாமரம் என்று. அதன் சுவையான கனிகளைப் புசித்த மக்கள் அது ஆக்ஸ் ஐயரின் 'பாதிரி தோட்டத்தில்' விளைந்த 'பாதிரி மாம்பழம்' என்று பிரஸ்தாபித்தார்கள். ஒசத்தி வகை மாம்பழ வரிசையில் இந்த 'பாதிரி மாம்பழமும் ' சேர்ந்து கொண்டது.

இந்த திரு. ஞானாச்சரியம் என்பவரின் மகன்தான் 'தரங்கை மிசியோன் சரித்திரம்' என்ற அற்புதமான சரித்திரப் புத்தகத்தை எழுதிய மறைதிரு. ஞா. சாமுவேல் ஐயர். இந்த தகவல்கள் மறைதிரு. ஞா. சாமுவேல் ஐயரின் மகன் மறைதிரு. சா. ஞானமாணிக்கம் ஐயர் அவர்களின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பாதிரி மாம்பழம் – ஹில்டா ஜெயச்சந்திரன் , 2015)

மாயவரம் TELC வளாகத்திற்கு வந்த எங்களுக்கு மரத்திலே பழுத்த பாதிரி மாம்பழத்தைக் கொடுத்தார்கள். அங்கு செயல்பட்டுவரும் பெண்கள் விடுதி, ஐயர் காலத்திலிருந்து இன்றுவரைத் தொடரும் பழைய பங்களா, மாமரத் தோட்டங்கள், பல்வேறு பழமரங்களைக் கொண்ட தோட்டங்களையும் சுற்றிப் பார்த்தோம். ஆக்ஸ் ஐயருக்குப் பிறகு அவர் உருவாக்கி வளர்த்த மரங்களிலிருந்து உருவான மாமரங்கள் பிரமாண்டமாய் வளர்ந்து கனிகொடுப்பதைப் பார்த்தோம்.

இங்கு செயல்பட்டுவரும் Girls Hostel நிர்வாகிகள் மற்றும் ஆசிரியைகள் ஆகியோரிடம் அளவளாவி மகிழ்ந்திருந்தோம். அப்பொழுது TELC பரிசுத்த இம்மானுவேல் ஆலய 150 ஆவது ஆண்டுவிழா மலரை அப்பொழுது அவர்கள் எங்களுக்குப் பரிசளித்தார்கள். 150th Anniversary of the Immanuel Church-Mayaveram -Mayiladuthurai - 1864-2014.

இந்த வளாகத்தில் உள்ள பழமையான பங்களா இன்றும் அப்படியே பெருத்த மாறுதல்கள் இன்றி உள்ளது. ஆக்ஸ் ஐயரும் அவருக்குப் பின்வந்த ஐயமார்களும் வாழ்ந்த பங்களா இது என்று சொல்லப்பட்டது.

மாயவரம் TELC ஆலய திருச்சபை வளாகத்தில் பல பிரமாண்டமான மாமரங்களைக் கண்டோம். சங்கை ஆக்ஸ் ஐயரின் மனைவி சாரா ஹேன்ட்ஸ் அம்மையார் நினைவாக தனியாக ஒரு மாந்தோப்பும் இங்கே உள்ளது (Mrs. Sarah Ochs Mango Garden). தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் ஒருமுறை இந்த வளாகத்திற்கு வருகை தந்திருந்தார் என்று எங்களிடம் அப்பொழுது சொன்னார்கள்.


***வளாகக் கல்லறைத் தோட்டம் :***

சுற்றுச்சுவரால் சூழப்பட்ட கல்லறைத் தோட்டமும் இங்கே இந்த வளாகத்தில் கண்டேன். கலெக்டர் J. J. காட்டன் அவர்களின் பெண் குழந்தை மரித்தபோது, அவளை இங்கேதான் புதைத்தார்கள். அவளுக்கு நினைவுச்சின்னம் எழுப்பிய பிறகு, இந்த கல்லறைத் தோட்டத்திற்கு அவர் தனது செலவில் சுற்றுச் சுவர் கட்டித்தந்திருக்கிறார். (The Tomb in the middle was built by the Collector for his little daughter who was buried there, Around the grave-yard. the Collector built a wall for Rs. 200/-, because before it was only surrounded by a hedge.) மெட்ராஸ் ராஜதானி முழுவதிலுமுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லறைகளை எல்லாம் தனது நூலான 'List of Inscriptions on Tombs or Monuments in Madras - book in two volumes, 1905' என்ற வரலாற்று ஆவணத்தில் பதிவிட்ட அவர், மாயவரம் Evangelical Lutheran Mission Cemetery யில் துயிலும் தனது மகளின் கல்லறையைப் பற்றி அந்த தனது நூலில் பதிவிட முடியவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அந்த கல்லறையை அங்கே நான் கண்டேன். சொற்ப ஆயுளில் காலராவில் உயிர் விட்ட திருத் தொண்டர் எர்னஸ்ட் G. வின்கெல் (1862-1891), 20 வயதுகூட நிரம்பாத அவரது மனைவி இளம் விதவையாக . . , இன்னும் சில திருத்தொண்டர்களும் அங்கே. . .

'ஒரு கிறிஸ்தவன் தான் மரித்தபிறகு பெறும் ஒரு விலையேறப்பெற்ற பரிசு அவனுக்கான ஒரு கல்லறையும், அதன் மீது வைக்கப்படும் சிலுவையும் மட்டுமே; ஆனாலும், இதற்காக முயற்சிப்பவர்கள் ஒரு சிலரே. The most precious, what a human being can get, is a Grave with a Cross on it;however only a few strive for it . . . ' அங்கிருந்து திரும்பி வரும்போது 'நான் பிழைத்திருக்கிறேன், நீங்களும் பிழைப்பீர்கள்' - (யோவான் 14:19 ) என்ற தமிழ் வாசகம் அந்த ஐரோப்பியத் திருத்தொண்டரின் கல்லறையில் எழுதியிருக்கக் கண்டேன் !







# திருநெல்வேலி திருச்சபையின்

## வரலாறு பகுதி 1

ரெமினா சுஜித்

**வரலாற்றில் திருநெல்வேலி**

**'வளர்ந்து பெருகுக'** என்று இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கும் நமது திருநெல்வேலி திருமண்டலத்தின் வரலாறு இனிமையானதும் பல்வேறு சுவாரசியங்களையும், தியாகங்களையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட திருநெல்வேலி திருமண்டலத்தின் வரலாறைக் காண்பதற்கு முன் அது வேர் பற்றி இருக்கும் திருநெல்வேலி மண்ணின் வரலாற்றை சுருக்கமாக காண்போம்.

**(பேராயர் எப்.ஜே வெஸ்டர்ன் (Rt.Rev.F.J.Western) அவர்களின் குறிப்புகளில் இருந்து திருநெல்வேலியின் வரலாறு)**

தென்னிந்தியாவின் தென் கோடியின் கிழக்குப் பகுதியில், மக்களும் பாரம்பரியமும் மிளிரும் திருநெல்வேலி (Tinnevel-ly) மாவட்டம் அமைந்துள்ளது. இதன் மேற்கே திருவாங்கூர் (Travancore) மாவட்டம் உள்ளது. இவற்றிற்கிடையே அழகான காடுகள் மற்றும் நீர்நிலைகள் வளம் கொண்ட மேற்குத் தொடர்ச்சி மலைகள் (Western Ghauts) கன்னியாகுமரி வரை நீண்டுள்ளன. திருநெல்வேலியின் நீளம் சுமார் 120 மைல்கள். அகலம் கன்னியாகுமரியில் இருந்து மதுரை எல்லை வரை 75 மைல்கள் வரை அதிகரிக்கிறது.

மேற்கு தொடர்ச்சி மலைகளின் அடிவாரத்திலிருந்து கிழக்கே கடல் வரை நிலப்பரப்பு மெதுவாக சரிந்து செல்கிறது. மாவட்டத்தின் நடுவே அழகான இயற்கை மயங்கும் தாமிரபரணி நதி பாய்கிறது. நதியின் இருபுறமும் ஒரு மைல் தூரம் வளமான வண்டல் மண் நிலம் உள்ளது. இங்கு நெல் பயிரிடப்படுகிறது. ஆண்டுக்கு இரண்டு முறை அறுவடை செய்யப்படுகிறது. பச்சை நெல் பயிர்கள் இந்தியாவின் மிகப் பிரகாசமான நிறங்களில் ஒன்றாகும்.

திருநெல்வேலியின் தெற்குப் பகுதியில் கடற்கரைக்கு அருகே அகன்ற மணற்பாங்கான பகுதி உள்ளது. இது பெரும்பாலும் சிவப்பு நிற மணலால் ஆனது. இவை தேரி (téris) என்று அழைக்கப்படும் பெரிய மணல் மேடுகளாக உள்ளன. தென்மேற்கு பருவக்காற்றின் கடுமையான காற்று மலையடிவாரத்தில் உள்ள வறண்ட சிவப்பு களிமண் நிலத்திலிருந்து தூசியை கிளப்பி கடற்கரைக்கு அருகே கொண்டு வந்து குவிப்பதால் இந்த மணல் மேடுகள் உருவாகின்றன. நீர் மற்றும் உரம் கிடைக்கும்போது இந்த சிவப்பு மணல் விரைவில் கருமையான வளமான மண்ணாக மாறுகிறது.

தேரி பகுதியின் சிறப்பு என்னவென்றால் அது பனை மரங்கள் அதிகம் காணப்படும் ஒரு சோலை வனமாகும். இவற்றின் வேர்கள் 40 அடி ஆழம் வரை சென்று தனக்கு தேவையான ஊட்டச்சத்தை உறிஞ்சுகின்றன. இப்பகுதி பனை வனம் என்றே அழைக்கப்படுகிறது. மீதமுள்ள பகுதிகள் பெரும்பாலும் காடுகளாகவும் புதர்களாகவும் இருந்தன. தற்போதைய காலக்கட்டத்தில் பனை மரங்கள் வெட்டப்பட்டு திறந்த

வெளிகளாக மாறியுள்ளன. இங்கு பருத்தி பயிரிடப்படுகிறது. சில பகுதிகள் பாறைகளாகவும் தரிசு நிலங்களாகவும் உள்ளன. மலைப்பகுதிகளில் இன்னும் காடுகள் உள்ளன. அங்கு புலிகளும் காட்டு விலங்குகளும் வாழ்கின்றன. சில நேரங்களில் அவை சமவெளிப் பகுதிகளுக்கும் வருகின்றன.

திருநெல்வேலி நிலநடுக்கோட்டிற்கு 8-10 டிகிரி வடக்கே உள்ளது. கடலுக்கு அருகில் இருப்பதால் வெப்பநிலை 75° முதல் 95° ஃபாரன்ஹீட் வரை இருக்கும். இங்கு மழைப்பொழிவு குறைவு மற்றும் காற்றில் ஈரப்பதம் சற்று அதிகரித்துக் காணப்படும் ஆனால் மத்திய, தெற்கு இலங்கை அல்லது இந்தியாவின் மேற்குக் கடற்கரையைப் போல அதிக ஈரப்பதம் இருக்காது. இந்தியாவின் உள்நாட்டுப் பகுதிகளைப் போல மிகவும் வறண்டதாகவும் இருக்காது.

இத்தகைய சிறப்பம்சங்கள் நிறைந்த வளமிக்க திருநெல்வேலியின் வரலாற்றை சுருக்கமாக காணலாம். கி.மு. 600 முதல் கி.பி. 1500 வரை பாண்டிய, சோழ அரசர்கள் ஆட்சி செய்தனர். கொற்கை (Korkai) என்ற இடம் முத்து வர்த்தகத்தின் முக்கிய துறைமுகமாக இருந்தது. கிரேக்கர்கள் இதனை கொல்கோய் (Kolkhoi) என்று அழைத்தனர். அதற்கு பின்னரே காயல் (Kayal) துறைமுகம் முக்கியத்துவம் பெற்றது. 1292ல் மார்கோ போலோவும் இதனைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

16, 17 மற்றும் 18ம் நூற்றாண்டுகளில் மதுரை நாயக்கர் வம்சத்தினர் திருநெல்வேலியை ஆட்சி செய்தனர். அவர்களின் கீழ் பல நிலப்பிரபுக்கள் இருந்தனர். இவர்கள் பாளையக்காரர்கள் (Poligars) என்று அழைக்கப்பட்டனர். 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் திருநெல்வேலியில் 32 பாளையக்காரர்களும், மதுரையில் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலும் இருந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் கோட்டைகளில் தங்கி தங்களுக்கு என்று தனிப்படைகளை வைத்து இருந்தனர்.

1751ல் கிழக்கிந்திய கம்பெனி நவாப்புக்கு உதவி செய்யத் தொடங்கியது. பாளைக்காரர்களை கட்டுப்படுத்த பல போர்கள் நடத்தப்பட்டன. 1783 மற்றும் 1799ல் நடந்த இரண்டு பெரிய போர்கள் கட்டபொம்மன் (Kattabomman) மீது நடத்தப்பட்டன. அவரது பாஞ்சாலங்குறிச்சி (Pinjalamkurichi) கோட்டை மிகவும் வலிமையானது. 1801ல் கர்நாடக பகுதி முழுவதும் கிழக்கிந்திய கம்பெனிக்கு உரிமையானது. இதன் பிறகு ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியது.

**திருநெல்வேலி பகுதியில் பல ஜாதிகள் உள்ளன. அவற்றில் மூன்று முக்கியமானவை:**

1. வெள்ளாளர் (Vellalas) - இவர்கள் பெரும் விவசாயிகள். ஆச்சாரங்களில், சமூக படிநிலையில் பிராமணர்களுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படுபட்டர்கள்.

1. மறவர் (Maravas) - பாளையக்காரர்களின் படைவீரர்களாக இருந்தவர்கள். தற்போது விவசாயிகளாக உள்ளனர். இராமநாதபுரம் (Ramnad) பகுதி ‘மறவர் நாடு‘ என்று அழைக்கப்பட்டது.

1. நாடார் (Nadars) - முன்பு சாணார் (Shanars) என்று அழைக்கப்பட்டனர். பனை மரம் ஏறுவதே இவர்களின் தொழில். சாதி அமைப்பில் கீழ் நிலையில் உள்ளவர்கள். 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர்களில் பலர் கிறிஸ்தவத்திற்கு மாறினர்.

அன்றையக் காலக்கட்டத்தில், பனை மரம் முக்கிய பணப்பயிராக இருந்தது. மக்கள் பனை மரத்தின் ‘பாளை’ வெட்டி பதநீர் எடுத்துக் கொண்டு, அதிலிருந்து சர்க்கரை மற்றும் கள் போன்றவற்றை தயாரித்தனர். மேலும், அவற்றின் ஓலைகளை வைத்து கூரை வேய்ந்தனர், பாய், கூடை பின்னினர், மற்றும் பனை மரத்தை வீட்டு தூண்களாகவும், பலகைகளாகவும் பயன்படுத்தி வந்தனர்.

கடந்த நூற்றாண்டில் பல ஜாதியினர் தங்கள் பாரம்பரிய தொழிலை விட்டு வேறு தொழில்களுக்கு மாறினர். குறிப்பாக நாடார்கள் பலர் வியாபாரம், ஆசிரியர் பணி போன்ற தொழில்களுக்கு மாறினர்.

சாதி அமைப்பிற்கு வெளியே ‘தீண்டத்தகாதவர்கள்’ என்று அழைக்கப்பட்ட மக்கள் இருந்தனர். இவர்களை தொடுவதும், பார்ப்பதும் கூட பிராமணர்களுக்கு தீட்டாக கருதப்பட்டது. இவர்களில் பள்ளர், பறையர் (Parayas) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ’பறையர்’ என்ற சொல்லிலிருந்துதான் ஆங்கிலத்தில் ’pariah’ என்ற வார்த்தை வந்தது.


**ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கத்தில் ஒரு சாதாரணமாக கிராமமாக இருந்த திருநெல்வேலி (தற்போதைய நகரம்) அக்காலத்தில் எப்படி இருந்தது என்பதை கற்பனை செய்து பார்க்கலாம்:**

1. 70 குடும்பங்கள் நிலக்கிழார்கள் ( பிராமணர்கள் அல்லது சூத்திரர்கள்).
2. 83 குடும்பங்கள் - விவசாய வேலை செய்பவர்கள்.
3. 140 குடும்பங்கள் - கைவினைஞர்கள், முடி திருத்துபவர்கள், துணி துவைப்பவர்கள் போன்றோர்.
4. பெரிய சிவன், விஷ்ணு கோவில்கள் - நிலக்கிழார்களுக்காக இருந்தன.
5. சிறு தெய்வ கோவில்கள், தெய்வங்களாக மாற்றப்பட்ட மரங்கள் - கீழ் ஜாதியினருக்காக இருந்தன.

நிலக்கிழார்கள் கிராமத்தில் தொழில் செய்யும் தொழிலாளிகளைக் கட்டுப்படுத்தினர். தங்களுக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு முடி திருத்துதல், துணி துவைத்தல் போன்ற சேவைகளை அவர்கள் மறுத்தனர்.

திருநெல்வேலி நகரம் தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ளது. இது மாவட்டத்தின் பழைய தலைநகரம். இதற்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ள பாளையங்கோட்டை (Palamcottah) புதிய தலைநகரமாக உருவானது. பாளையங்கோட்டை என்ற பெயரே ’முகாம்-கோட்டை’ என்ற பொருளைக் குறிக்கிறது.

இது திருநெல்வேலியைப் பாதுகாக்க கட்டப்பட்ட கோட்டையாகும். 18ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இது முக்கியமான கோட்டையாக இருந்தது.



**திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பிரம்மாண்டமான இந்து கோவில் தென்னிந்திய இந்து மதத்தின் சாராம்சமாக கருதப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பிற முக்கிய நகரங்கள்:**

1. ஸ்ரீவில்லிபுத்தூர் (Srivilliputhar) - வடமேற்குப் பகுதியில் உள்ளது.
2. கோவில்பட்டி (Koilpatti) - திருநெல்வேலியிலிருந்து மதுரைக்குச் செல்லும் சாலையில் உள்ளது.
3. ஸ்ரீவைகுண்டம் (Srivaigundam) - தாமிரபரணி நதிக்கரையில் உள்ளது.
4. தூத்துக்குடி (Tuticorin) - கடற்கரை துறைமுகப் பட்டினம்

திருநெல்வேலியின் பொருளாதாரம் விவசாயத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. இங்கு நெல் சாகுபடி முக்கிய இடம் பெறுகிறது, ஏனெனில் தாமிரபரணி நதிக்கரையோரம் வளமான வண்டல் மண் நிலம் காணப்படுகிறது. ஆண்டுக்கு இரண்டு முறை அறுவடை செய்யும் வசதியுடன், விவசாயிகள் அதிக வருவாயை பெற்றுக்கொள்கின்றனர். மேலும், பருத்தி சாகுபடி பரவலாக பயிரிடப்படுகிறது, இது பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகிக்கிறது. பனை மரம், அதன் பல பொருளாதார பயன்களால், வர்த்தகத்தை மேம்படுத்துகிறது. கடற்கரைப் பகுதியில், முத்து வர்த்தகம் முக்கியத்துவம் கொண்டது, இது திருநெல்வேலியின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

இத்தகைய பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்ட மற்றும் காலப்போக்கில் பல மாற்றங்களையும் சந்தித்து வரும் இந்த திருநெல்வேலியில் கிறிஸ்தவம் எவ்வாறு வேருன்றியது என்பதை இனிவரும் தொடர்களில் விரிவாக காண்போம்.

*தொடர்ந்து பயணிப்போம்...*


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

# தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் 250 வது பிறந்த நாள் விழா

பராபரனின் பேரருளால் கடந்த செப்டம்பர் மாதம் 6, 7, 8 ஆகிய தினங்களில் தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களின் 250 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள் பராபரனின் மகிமைக்கென சிறப்பாக நடைபெற்றது.

சாஸ்திரியார் அவர்கள் 1774 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் நாள் திருநெல்வேலியில் பிறந்தார். அவரது 11 ஆவது வயதில் தந்தை கிறிஸ்டியன் ஃபிரட்ரிக் ஸ்வார்ட்ஸ் ஐயர் அவர்களால் தஞ்சைக்கு அழைத்து வரப்பட்டார். பிறகு 1789 ஆம் ஆண்டு தரங்கம்பாடிக்கு இறையியல் மற்றும் உயர் கல்விக்காக அனுப்பி வைக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகள் கல்வி பயின்று மீண்டும் தஞ்சைக்கு வந்தார். தஞ்சையில் ஆசிரியப் பணியும் திருச்சபை சந்திப்பு மற்றும் சுவிசேஷ பணியையும் செய்யத் தொடங்கி, பல்வேறு வகையான இலக்கியங்கள், கீர்த்தனைகளை படைத்து இறைபுகழ் பாடி நற்செய்தி கவிஞராக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அலைந்து திரிந்து அருட்பணி ஆற்றி, இறைநம்பிக்கை ஊட்டி, இறைமகன் இயேசுவின் மகத்துவங்களை எடுத்துக்கூறிய சங்கை. வேதநாயகம் சாஸ்திரியார் அவர்கள் இரண்டு நூற்றாண்டுகள் கடந்தும் மங்கா புகழுடன் இன்றும் நினைவுக்கூறப்பட்டு பராபரனின் பக்தனாகவும் அடியவராகவும் போற்றப்பட்டு வருகிறார். இவருடைய 250 வது பிறந்த நாள் விழா தஞ்சை தூய பேதுரு ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

'சாஸ்திரியால் அல்லோ பள்ளிக் கூடங்களும்
சபையும் கோவிலும் தான் சிறந்து
சாஸ்திரியாலே உன் மைந்தர்கள் எல்லாம்
சமர்த்தர் ஆயினார் ஞானப் பெண்ணே.'

(வே.சா., சாஸ்திரக் கும்மி, 769.)

விழாவின் முதல் நாள் செப்டம்பர் 6 ஆம் தேதி காலை 7:30 மணி முதல் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் வந்திருந்த நான்காம் தலைமுறை தொடங்கி பதினோராம் தலைமுறைமட்டுமான சாஸ்திரியார் சந்ததியாரின் வருகையும் அறிமுகமும் தூய பேதுரு ஆலய







வளாகத்தில் நடைபெற்றது. காலை 9:30 மணிக்கு தூய பேதுரு ஆலயத்தினுள் கூடிவந்ததனர். அப்போது தஞ்சை தூய பேதுரு ஆலய வரலாற்றையும் சிறப்பையும் பற்றி சங்கை. நோவா சாஸ்திரியார் அவர்கள் விளக்கிக்கூறி, அடுத்து வருகிற ஒவ்வொரு விழா நிகழ்வுகளுக்காகவும் ஜெபித்தார்.

அன்று மாலை 6:30 மணிக்கு தூய பேதுரு ஆலய வளாகத்தில் சாஸ்திரியாரின் 250 வது பிறந்த நாள் விழா தூய பேதுரு ஆலய முதன்மை ஆயர் மறைதிரு. பால் இரத்தினம் ஐயர் அவர்களின் ஜெபத்துடன் தொடங்கியது. தொடக்க நிகழ்வாக சாஸ்திரியாரின் 250 வது பிறந்த நாள் நினைவு விழா சிறப்புரையை சங்கை. நோவா சாஸ்திரியார் வழங்கினார். அதனைத் தொடர்ந்து சங்கை. கிளமென்ட் வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களும் அவருடைய குழுவினரும் சேர்ந்து 'நமோ' இன்னிசை நிகழ்ச்சி மூலமாக பாடி பராபரனை மகிமைப்படுத்தினர்.

மறுநாள் செப்டம்பர் 7 ஆம் தேதி காலை 7 மணிக்கு தூய பேதுரு ஆலயத்தில் சாஸ்திரியார் நினைவு திருவிருந்து சிறப்பு ஆராதனை நடைப்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆலய பாடகர்குழுவுடன் இணைந்து பவனியாக கல்லறைத்தோட்டம் சென்று அங்கு சாஸ்திரியாரின் கீர்த்தனை பாடலான 'கண்டேன் பரமண்டலம்' என்ற பாவினைப் பாடி பராபரனை மகிமைப்படுத்தினர். பராபரன் இம்மண்ணில் சாஸ்திரியாரை கொடையாக கொடுத்த ஈவை நினைத்து நன்றி கூறி ஆயர் அவர்களால் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பிறகு சாஸ்திரியாரின் சந்ததியார் ஒவ்வொருவரும் சாஸ்திரியாருடைய கல்லறையில் மலர் வைத்து அவரை நினைவு கூர்ந்தனர். அதன் பின்னர் தூய பேதுரு ஆலய முகப்பில் சாஸ்திரியாரின் சந்ததியார் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

அன்று மாலை 5 மணிக்கு சாஸ்திரியாருடைய சுவிசேஷ பிரசங்க சாலையில் கூடிவந்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த சாஸ்திரியாரின் 250 வது பிறந்த நாள் விழா நினைவு கல்வெட்டை அமெரிக்க ஐக்கிய தேசத்திலிருந்து வந்திருந்த திரு. இராபர்ட் வில்லியம் அவர்கள் திறந்துவைத்தார். மேலும் திரு. வில்சன் பால் அவர்கள் தன் முற்பிதாக்கள் இந்த சாஸ்திரியார் இல்லத்தில் பிறந்து வளர்ந்ததை நினைவு கொள்ளும் பொருட்டு அன்பளிப்பு செய்த சாஸ்திரியாரின் புகைப்படத்தை திறந்து வைத்தார். மற்றுமோர் சாஸ்திரியார் புகைப்படம் திரு. மனோகர் மார்க் அவர்களால் கொடையாக கொடுக்கப்பட்டது. அதை அமெரிக்க நாட்டிலிருந்து வந்திருந்த மருத்துவர் மனோ ஜான்சன் அவர்கள் திறந்துவைத்தார். அவரவர் தங்கள் நினைவுகளை பகிர்ந்துக்கொண்டனர்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு தூய பேதுரு ஆலய வளாகத்தில் நடைபெற்ற விழாவில் சென்னை திரு. அருள் பிரகாஷ் அவர்கள் தலைமையில் பக்தி நெறியை வளர்ப்பதில் பெரும் பங்காற்றுவது: பாரம்பரியப் பாடல்களே! புத்தெழுச்சி பாடல்களே! என்ற தலைப்பில் அணிக்கு இரண்டு பேராக பங்கு பெற்று வாதிட்டு பாரம்பரியப் பாடல்களின் மாண்பை வலியுறுத்தி இன்றளவும் பக்திக்கு முதன்மையாக இருக்கிறது என்பதை நிலைநிருத்தினர். தொடர்ச்சியாக சாஸ்திரியாரின் அரும்பெரும் படைப்பாகிய பெத்லகேம் குறவஞ்சி இலக்கித்தை அடிப்படையாகக் கொண்ட நாட்டிய நாடகமும் கோலாட்டமும் சென்னை கிறிஸ்து நாட்டிய மையத்தின் மூலமாக நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வுகளில் தஞ்சை மராட்டிய மூத்த இளவரசர் பாபாஜி இராஜா போன்ஸ்லே அவர்களும், தஞ்சை மாநகராட்சி மாமன்ற மேயரும், தஞ்சை சட்டமன்ற உறுப்பினரும், திருச்சபைகளின் ஆயர்களும், திருச்சபை மக்களும், சாஸ்திரியார் சந்ததியினருமாக சேர்ந்து பெருந்திரளாக பங்குபெற்றனர். நிறைவாக தூய பேதுரு ஆலய ஆயர்கள் மறைதிரு. ஜெபராஜ் புருஷோத்தமன் ஐயர் அவர்கள் ஜெபிக்க, மறைதிரு. பால் இரத்தினம் ஐயர் அவர்கள் இறையாசி கூற விழா இனிதே நிறைவுற்றது. இந்த விழாவின் ஒருங்கிணைப்பாளர் திரு. ஜூடா வின்சென்ட் அவர்கள் கடந்த ஒருவருட காலத்திற்கும் மேலாக பெரும் முயற்சி மேற்கொண்டு பராபரனின் அருளால் சிறப்பாக நடத்தினார். அவருக்கும் அவரோடு இணைந்து பணியாற்றிய விழா குழுவினர்க்கும் நெஞ்சார்ந்த நன்றி.

அடுத்த நாள் செப்டம்பர் 8 ஆம் தேதி காலை 9 மணி ஆராதனை சாஸ்திரியார் ஞாயிறு ஆராதனையாக தூய பேதுரு ஆலயத்தில் நடைப்பெற்றது. ஆராதனையில் சாஸ்திரியாரின் கீர்த்தனைகள் பாடப்பட்டது. அதில் ஆலய பாடகர் குழு பாடிய சாஸ்திரியாரின் இரண்டு கீர்த்தனைகளுக்கான அறிமுகமும் விளக்கமும் சங்கை. நோவா சாஸ்திரியார் கொடுத்தார். இறைச்செய்தியை சங்கை. கிளமென்ட் வேதநாயகம் சாஸ்திரியார் அவர்கள் வழங்கினார்.



இவ்வாறாக மூன்று நாட்கள் வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களின் 250 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள் பராபரனின் மகிமைக்கென சிறப்பாக நடைபெற்றது. பராபரனுக்கு தோத்திரம்.



# கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்

2.2.3(4), North Street, Bungalow Surandai-627859, Tenkasi district

ஆங்கிலிக்கன் திருச்சபையின் முதல் இந்திய அத்தியட்சர், மகோன்னத இந்திய கிறிஸ்தவத் தலைவர், அனைத்துலகக் கிறிஸ்தவ திருச்சபை மேதாவி என்று பெரும் புகழ் படைத்தவரும் மற்றும் இந்திய மிஷனெரி சங்கத்தின் நிறுவனர், கிறிஸ்தவ வாலிபர் சங்க செயலர் என ஒப்புயர்வற்ற மிஷனெரியுமான

# பேராயர் V.S அசரியா

அவர்களின் நூற்றி ஐம்பதாவது பிறப்பு விழாவைக் கொண்டாடும் விதமாக நடத்தப்படுகின்றன.

150th YEARS ANNIVERSARY celebration

## கட்டுரைப் போட்டி

## தலைப்பு: பேராயர் அசரியா என்னும் மாபெரும் தலைவனின் உருவாக்கமும் மெருகேற்றலும்

1st PRIZE ₹ 30,000

2nd PRIZE ₹ 20,000

3rd PRIZE ₹ 10,000

1. கட்டுரைகள் எங்கும் இதுவரை வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.
2. கட்டுரைகள் பக்கங்கள் ஒருங்குறியில் (Unicode) அமைய வேண்டும். கணினியில் தமிழில் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். எழுத்தளவு 12 இருக்க வேண்டும்.
3. கட்டுரைகளை **31 அக்டோபர் 2024** க்குள் நிறைவு செய்து .doc அல்லது .pdt கோப்பு வடிவில் christianhistorical@gmail.com அனுப்ப வேண்டும்.
4. கட்டுரைகளில் உள்ள சொற்களின் எண்ணிக்கை A4 தாள் பக்க அளவு, இடம்பெறக்கூடிய கட்டுரைகளுக்கு அளவு 10 பக்கங்கள் வரை இருக்கலாம்.
5. பரிசு பெறும் கட்டுரைகள் மட்டுமல்லாது, பொருத்தமான கட்டுரைகள் அனைத்தையுமே வெளியிடக் கூடிய நூலில் இடம்பெறச் செய்ய உள்ளோம்.
6. தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது. சிறந்த கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசு உண்டு. போட்டியில் பங்குபெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
7. பரிசளிப்பு பிறந்த நவம்பர் மாதத்தில் வழங்கப்படும். தேதி பின்னர் அறிவிக்கப்படும்.
8. கட்டுரைகளை மதிப்பீடு செய்வதற்கு அவ்வத்துறைகளில் உரிய கல்வித் தகைமைகளும் அநுபவமும் வாய்ந்த நடுவர்கள் உள்ளனர்.
9. கட்டுரை தொகுப்புடன் ஆசிரியர்களின் தங்கள் வாழ்க்கை குறிப்பினை 500 சொற்களுக்கு மிகாமல் எழுதி தங்கள் முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் புகைப்படத்துடன் கட்டாயம் அனுப்ப வேண்டும்.

**தலைவர்**
**ASAR. பாலச்சந்திரன்**

**செயலர்**
**மன்னா செல்வகுமார்**



# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in





# Yearly Subscription



**600**

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history


Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401